# தென்மொழி

## மண்ணுரிமை மீட்பதென்றோ?

தெங்கிளநீர்க் குலையினிலே
தேரைநோய் பாய்ந்ததைப் போல்
தென்தமிழ இனத்தில் வந்தே,
தங்கியவேற் றினத்தவர்க்குத்
தாள்பிடித்துக் கைக்கட்டித்
தம் வயிறு வளர்க்கும் போது,
மங்கிவரும் தமிழ்மொழியைத்
தமிழினத்தைத் தமிழ்நிலத்தைத்
தமிழ்ப் பண்பைத் தமிழர் கலையை
எங்கிவர்கள் முன்னேற்றி
வளர்த்தெடுத்தே இவ்வுலகில்
ஏற்றதோர் இடத்தைக் காண்பார்?

வடமொழிக்கே உழைத்துழைத்து
வயிறுவளர்ப் பார்சிலபேர்!
வடநாட்டார்க் குழைப்பர் சிலபேர்!
படமொழியில் கதையெழுதிப்
பாட்டெழுதிச் சீர்குலைவைப்
பரப்பி வாழ் வார்கள் சிலபேர்!
திடமுடைய கொள்கையில்லை;
தென்பில்லை; இனத்துக்கொரு
தீங்குவந்தால் எதிர்ப்பதில்லை!
மடமனத்தர், மானமிலர்,
இக்காலத் தமிழரிவர்!
மண்ணுரிமை மீட்ப தென்றோ?

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 25
ஓலை : 3

விலை
உருபா : 2-00

# நமக்கு வந்த மடல்கள்.

○ : 1374 : புலமை நலஞ்சான்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, வணக்கம். மடங்கல் இதழில் தங்களது ஆசிரியவுரை செப்பமாகவும், திட்ப நுட்பம் மிக்கதாகவும் மிளிர்கிறது. உலக மக்கள் செயற்பாடுகளை எண் வகையாகப் பகுத்து நுண்ணாய்வு நல்கியமை பெருமிதம் தருகிறது.

'போக்கின் போதலும்' 'பொதுவெனப் படுதலும்' இந்நாளில் பெருகி வரக் காண்கிறோம்;

''காலையில் எழுவேன்; கடன்கள் முடிப்பேன்;
சிற்றுண வெடுப்பேன்; செய்தொழில் விரைவேன்;
நண்பகல் உண்பேன்; மாலையில் வருவேன்,
வானொலி காணொலி வருமே உறக்கம்;
ஒவ்வொரு நாளும் இதுவே தொடரும்!
இதுவா வாழ்வு? இதுவா வாழ்வு?''

என்று சிங்கப்பூர்ச் செய்தித்தாளில் சீனர் ஒருவர் எழுதிய ஆங்கிலப் பாடலின் மொழி பெயர்ப்பைப் பேராசிரியர் கா. அப்துல்கபூர் அவர்களும் சுட்டிக் காட்டியுள்ளார் (மனவீதி, ப.viii

'நோக்கின் இயங்கலும்' 'நோற்றன செய்தலும்' அருகி வருகின்றன; தூக்கியது ஆற்றலும்' 'துலங்குவது முடுக்கலும்' அருஞ்செயலாக அமைந்துள்ளன, ''மேற்கொளல் இயற்றல்'' ஆகிய சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து, பொதுவுணர்வுகளும் செயலாக்கத் திட்டங்களும் கொண்டு பொதுநலத் தொண்டு புரிவது விரும்பத்தக்கது; 'மீறி அது செய்தல்' என்னும் எட்டாம் படிநிலையில், ''எதிர்த்து வரும் இன்னல்களும் கொஞ்ச நஞ்சமா? அவற்றை எதிர்த்து நின்று வெற்றி கொள்வோம் அஞ்சா நெஞ்சமாய்'' என்னும் மொழிக்கேற்ப அயராது செயலாற்றும் ஆண்மையாளர் தமிழினம் தழைத்தோங்கத் தக்க வகையில் விழைந்து உழைத்திடத் தூண்டியுள்ளீர்கள்.

''சலுகை போனால் போகட்டும்—என்
அலுவல் போனால் போகட்டும்!
தலைமுறை ஒருகோடி கண்ட—என்
தமிழ் விடுதலை ஆகட்டும்''

என்ற பாவேந்தரின் வீறுசால் மொழியினையும் இணைத்து நினைந்து, தங்களைப் போற்றிப் புகழ்ந்து மகிழ்கிறேன், என்றும் அன்பன்,

முனைவர்—பா. வளன் அரசு. பாளையங்கோட்டை.

○ : 1375 : என் அரும்பெறல் ஆசிரியரீர், வணக்கம். தென்மொழி வந்தது. நண்பர் தேவநேயச்சித்திரனின் மறைவை இதழ் வழி அறிந்தேன். அதிர்ச்சியுற்றேன், செய்தியை என்னால் நம்ப முடியவில்லை. பிள்ளைகளும் என் மனைவியும் மிகவும் கண்கலங்கி விட்டனர்.

தொடக்கக் காலத்தில் தென்மொழிக்கு அவர் ஆற்றிய தொண்டுகள் மிகவும் மதிக்கத் தக்கன. ஓர் இரவு முழுவதுங்கூட அயராது நின்று பொறிபோட்ட அவரது உழைப்பு, திண்மை-

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம்.)

Scanned with CamScanner

சுவடி 25] உ௦கஎ௱ கடகம்-மடங் (ஆக-செப், 89') [ஓலை: 3

# 'திருக்குறள் தமிழின நல நூலே!

பழந்தமிழினத்தின் ஒட்டுமொத்த அறிவின் வெளிப்பாடாகத் தோன்றிய நூல் திருக்குறள்! ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுக்காலம் ஆரியத்தால் மறைக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த நூல் அது! கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் எழுந்த பார்ப்பனப் பரிமேலழகர் பார்ப்பனீயச் சார்பாகவும், அதை மனு(அ)தர்ம நூலுடனும், கௌடிலியரின் அர்த்தசாத்திரத்துடனும், வாத்சாயனரின் பாலியல் விளக்கக் காம நூலுடனும் இணைத்துக் காட்டியும் எழுதிய உரைக்குப் பின்னர் தாம், அது மதிக்கப் பெற்றுப் பாராட்டுப் பெற்றது.

இதுவரை ஏறத்தாழ நூற்று இருபதுக்கும் மேற்பட்ட உரைகள் அதற்கு எழுதப் பெற்றிருந்தாலும், இன்னமும் அதன் உண்மைப் பொருள்கள் முழுவதுமாக வெளிப்படுத்தப் பெறவில்லையென்றே சொல்லுதல் வேண்டும். இன்றும் அதை அறிஞர்கள் பலரும் பல்வேறு கோணங்களில் திறனாய்வு செய்த வண்ணமாகவே உள்ளனர். இந்நிலைகள், புறநிலையில் திருக்குறளுக்கு ஒருவாறு பெருமை செய்வனவாகவே கொண்டாலும், அதன் அகநிலையில், உள்ள மெய்ப்பொருள் தன்மைகளை இன்னும் எவரும் சரிவர மதிப்பிட்டுக் கூறினர் இல்லை என்றே கருதுதல் வேண்டும்.

அதைப் பலரும் ஒரு தர்மநூல் என்றும், அறநூல் என்றும், வாழ்வியல் நூல் என்றுமே பல கோணங்களில் விளக்கம் செய்து எடுத்துக் காட்டி வருகின்றனர். அதுபோலவே அதைத் தம் தம் சமயம் சார்ந்ததாகக் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்வாரும் இன்றும் உளர். இன்னும், இக்கால வணிக நோக்கம் கொண்டார் ஒரு சிலர் அறிந்தோ,—அறியாமலோ, அந்நூல் கருத்துகளை ஓர் இயக்கக் கொள்கைகள் போல் தெரிவித்துப் பெருமைப் படுத்துவார் போல, அதன் வெளிப்பாட்டு நோக்கத்தைத் திசை திருப்பல் செய்து, அஃது எந்த விளைவுக்கென எழுதப் பெற்றதோ, அந்த நோக்கத்தையே இத் தமிழ் மக்கள் உணரா வண்ணம் செய்து வருகின்றனர். இக்கருத்துகளையெல்லாம் யாம் ஏறத்தாழக் கடந்த இருபதாண்டுக் காலமாக மிகவும் நுணுகி ஆராய்ந்து, எழுதிக் கொண்டு வரும் 'திருக்குறள் மெய்ப்பொருள் உரை'யில், தக்கவாறான தடை விடைகளுடனும் சான்றுகளுடனும் எடுத்து விளக்கி, மறுக்க வேண்டுவன மறுத்தும் சிறக்க வேண்டுவன சிறப்பித்தும் காட்டுவோம். ஆனால், அதுவரை திருக்குறள் பற்றிய போலியும் பூசலும் நிறைந்த உரைகளையும், ஊடாட்ட இயக்கங்களையும் பற்றி, அறிஞர்களும், பொது மக்களும் மிகவும் எச்சரிக்கையாகவும், விழிப்பாகவும் இருக்க வேண்டும் என்னும் கருத்தில், இச்சிறு விளக்கத்தினை எழுத விரும்புகிறோம்.

திருக்குறள் தோன்றிய காலத்துத் தமிழ்நிலத்தில் ஆரியம் உட்புகுந்து, தமிழினத்து ஏற்கனவே தோன்றிப் பல்கிப் படர்ந்து செழித்திருந்த தமிழிய உட்கூறுகளையெல்லாம் படிப்படியாகத்

திரித்தும், திசைத்தும், தம்மினப் படுத்தச் செய்து மூலத்தோற்றத்தையே மறைத்தும் வந்தது. அஃது ஆரிய இனம் வலுப் பெறத் தொடங்கிய காலம். அதை அக்காலத்திருந்த அறிஞர் சிலர் உணர்ந்திருக்கலாம் என்றாலும், வெளிப்படையாக எவரும் எடுத்துப் பேசவோ எழுத்து வழி மக்களுக்கு அறிவிக்கவோ முற்படாதிருந்திருத்தல் வேண்டும். அன்றைய தமிழ் அரசுகளும் அத்தகையவர்கள் துணிவு கொள்ளுமாறு ஊக்கமாக நடந்து கொள்ளாமல், அவ்வாரியப் பசப்பிலும் பூசலிலும் அழுந்திக் கிடந்து அவ்வாரியத்திற்கே ஆதரவளித்திருத்தல் வேண்டும். எனவே, அற்றை அறிவோரும் புலவோரும், இற்றைநாள் ஆரிய வல்லாண்மையை நேரிடையாக எதிர்த்துக் கருத்துக் கூறவோ, பாடாற்றவோ துணிவின்றி முடங்கியும் அடங்கியும் கிடக்கின்ற அறிவரையும் புலவரையும் போல, அஞ்சியும் ஒடுங்கியும் கிடந்திருத்தல் வேண்டும்.

அப்படிப்பட்ட கோழைப் புலவருள் ஒருவராக மோழை பட்டுக் கிடக்க விரும்பாத நம் திருவள்ளுவ இனநலப் பேராசான், தம் நுண்ணறிவுத் திறங்கொண்டு, ஆரியத் தாக்கத்தால் அழிந்து விடாமல், பல்லாயிரமாண்டுகளாக நம் பழம் பெருந் தமிழினத்தில் உருண்டு திரண்டு உருவாகி நிலைபெற்றிருந்த அறிவியல், வாழ்வியல், மெய்ப்பொருளியல் கருத்துகளையும், பண்பாடுகளையும் எதிர்காலத் தமிழின மக்கள் உணருமாறு, இலைமறை காயாக எடுத்து நிறுவிய இனநலக் காப்பு நூலே நம் அரும்பெறல் செல்வமாகிய திருக்குறள் என்று நாம் தெள்ளிதின் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இதற்கு அகச் சான்றாகவும் புறச்சான்றாகவும் இருப்பன, திருக்குறளுக்கு முன்னும் பின்னும் இல்லாத அதன் தனிச்சிந்தனையும், இனநல வெளிப்பாடான கருத்துகளுமே ஆகும்.

இவை அனைத்தும் தமிழியல் நலன்களை உள்ளடக்கியவை. தமிழியலும் ஆரியவியலும் மயங்கிக் கிடந்த அந்த வேளையில், தமிழினத்திற்கொத்த தமிழியல் நலன்களை மட்டும் வேறு பிரித்துக் காட்டுகிறது திருக்குறள், அதில் மதமில்லை; சாதியில்லை; புராணமில்லை; பொய்யில்லை; கரவில்லை; கதையில்லை. முழுக்க முழுக்க, தமிழர்கள் பின்பற்றி வந்த பொதுமை நலன்கள். தமிழினத்தின் தோற்றக் காலத்திலிருந்து, அவர் வாழ்ந்திருந்த காலம் வரை, சீரும் சிறப்பும் பெற்ற எந்தமிழ்ப் பேரினம், தன்னுள் தேக்கி வைத்துக் கொண்ட பொதுமை நலம் கனிந்த வாழ்வியல் கூறுகளை ஆவணப் படுத்தி, எழுத்துப் பட்டயமாக அழுத்தி வைத்த அடையாளப் பதிவுகளே திருக்குறள்.

அதில் கூறப் பெறுபவை அனைத்தும் தமிழின நலத்தையும், அதன் தனி மானத்தையும், அதன் அன்பியல், அறவியல், அறிவியல், அரசியல் வாழ்க்கைக் கூறுகளேயாம்! அவை தமிழினத்திற்கு மட்டுமே உரிய தனிநலக் கருத்துகள்! ஆரியத்திற்கோ, வேறியத்திற்கோ அவை இல்லை. அக் கருத்துகளுக்கு மாறானவை தமிழியல் அன்று; ஆரிய வியலாகும். எனவே, திருக்குறளை ஒப்பாதவரும் தமிழர் அல்லர். அவர் ஆரியரோ, அல்லது அவர் அடி வருடிப் பிழைக்கும் அடிமைத் தமிழராகவோ தாம் இருத்தல் முடியும்.

திருக்குறளில் வரும் கருத்துகளும், கருத்து மூலங்களும் உலகில் வேறு எந்த நூலாசிரியனின் நூலிலும் காணப்படாத

Scanned with CamScanner

தனித் தன்மை வாய்ந்தவை; அதில் கூறப்படும் இறையியல், இயற்கையியல், இல்லறவியல், இல்லறவொழுக்கவியல், பொது மாந்தவியல், அரசியல், பொருளியல், இன்பவியல் ஆகிய அனைத்துக் கருத்தாயினும் சரி, அவை கடைப்பிடிக்கப் பெறுங்-கால், தமிழியல் தானே மலர்ச்சியுறும்; தமிழினம் தானே வளர்ச்சியுறும். தமிழ்நிலம் தானே உரிமை பெறும்.

அதில் கூறப்பெறும் துறவறம், காவியும், கமண்டலமும், சடை முடியும், தடிதண்டும் தாங்கிய ஆரியத் துறவறமன்று; தமிழர்க்குப் பொதுமை நலம் நாடித் தந்நலந் துறந்த தறு-கண்மை தாங்கும் அறிவு வாழ்வாகும் அது! அதில் காட்டப் பெறும் தமிழர்க்குகந்த தாளாண்மை கொண்ட அறவியல் தழுவிய அரசியல், மனு(அ)தர்மத்தின் மாந்தப் பண்பற்ற ஆரியரின் ஏடாகூட ஏமாற்றுக் கௌடிலிய ஆட்சியின் தழுவ-லன்று; தமிழரின் தன்மானமும் தன்மதிப்பும் தன்னறிவும் தன்னுணர்வும் கொண்ட உண்மையான இறைமை தழுவிய மண்ணுணமையின் மாட்சியியலாகும், அது! அதில் உணர்த்தப் பெறும அமைச்சியல், மாபாரதத் துரியோதனர்க்கும், இராமாயண கோசலைக்கும் மறைவினின்று கரவின் ஓதப்பெற்ற சகுனியினதும், கூனியினதுமான நஞ்சு நெஞ்சின் வஞ்சனைக் கூறன்று; பழந்தூய பாண்டிய மரபின் வளந்தாங்கிய மக்கள் நலங்கேட்கும் இனந்தாங்கிய அறிவியல் சாருகும் அது!

தமிழ் நூல்களில் வேறெந்நூல்களிலும் காணப் பெறுமல், திருக்குறளாகிய செம்பொருட் பனுவலில் மட்டுமே காணப் பெறும் குடியியல், தமிழின நலங் கருதியே கூறப்பெறும் மேன்மைக் கருத்து அடைவாகும் என்பதை எந்தத் தமிழருமே மறந்து போய் விட வேண்டா.

மேலும், திருக்குறளின் இன்பத்துப் பாலில் கூறப் பெறும் மனநலமும் அறிவு நலமும் உடல் நலமும் பொருந்திய மேம்பட்ட காதலியல் கருத்துகள், வாத்சாயனரின் உடலுணர்வுப் பாலியல் கருத்துகளோடு தொடர்புடையன அல்ல. தமிழியல் தழுவிய இல்லறத்தின் அடிப்படைக் கூருகவும், அவ்வினத்தின் பண்பியல் விளைவாகவும் துய்க்கப் பெறும் தூய தமிழ் இன்பியல் உணர்வுத் தொகுப்புகளாகும் அவை.

எனவே, தூய தமிழ் இனநலம் நோக்கியே கூறப்பெறும் திருவள்ளுவ வடிவங்களை வாழ்வின் வெற்றுணர்வுக் கூறுகளாகக் கருதி, சடங்குகளாக வளர்த்துப் பருவான கட்சி வடிவிலோ, மத வடிவிலோ. இயக்க வடிவிலோ, அல்லது அவற்றினும் மேம்பட்ட வழிபாட்டு வடிவிலோ, கொண்டு, உருவாகி வரும் இனநல உணர்வைச் சிதைத்து அழித்துவிட வேண்டாம் என்று திருக்குறள் தொடர்பாக இயங்கி வரும் அனைத்து அறிஞர்களையும், குழுவங்-களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். திருக்குறள் தமிழினம் காக்கத் தோன்றிய ஒரு பட்டய ஆவணப் பதிவு நூலே! வெறும் மறையென்று கூறி, அதை மக்களுக்கெட்டாத உயரத்தில் வைத்தோ, பொதுமறை என்று கூறி அதைத் தமிழின நலத்திற்குப் பயன்படாத வகையில் அவ்வினத்தினின்று பிரித்து அப்புறப்படுத்தியோ விட வேண்டா என்று அனைவரையும் வேண்டியும் கொள்கிறோம்!

○

ஒரு வரலாற்றுச் சுருக்கம்:

# தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்!

1925-ஆம் ஆண்டு, ஆகத்து மாதம் 23 ஆம் நாள் தஞ்சை நகரில் நற்றமிழ் அறிஞர்கள் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் ஒரு தீர்மானம் இவ்வாறு கூறியது.

"தமிழிலே ஆங்கில நுண்ணூல்களை மொழி பெயர்க்கவும் வடமொழியிலும் பிறமொழிகளிலுமுள்ள அரிய நூல்களை மொழி பெயர்க்கவும், தமிழ்நாட்டில் பல இடங்களிலுமுள்ள பல்வகைக் கலைத் துறைகளுக்குரிய ஏடுகள் யாவற்றையும் சேர்த்து அவற்றை ஒத்துப் பார்த்து அச்சியற்றவும் தமிழிலே புதுக்கதைகளாக எழுதப்படுகின்ற பொத்தகங்களைத் திருத்தம் செய்யவும், பிழை மிக்கவற்றைக் கண்டித்து ஒதுக்கவும், தமிழில் இலக்கணம், கழக நூல், அறநூல், பெருப்பாவியங்கள், சிறுபாவியங்கள், சமயநூல், கணிய (சோதிட) நூல், மருத்துவ நூல், ஓகநூல், இசைநூல், கணக்குநூல், ஓவியம், சிற்பம் முதலியவற்றைத் தனித்தனியே செம்மையாக ஆராய்ச்சி செய்யவும் ஆங்கிலத்திலே உள்ளபடி பலவகைப் பேரகராதிகள் அமைக்கவும்..." ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் தேவை.

இப்பணியை நிறைவேற்ற ஒரு குழு அமைக்கப்பெற்றது. அதற்குத் தி. நெ. சிவஞானம் அவர்கள் தலைவர். திருச்சி பிசப்-ஈபர் கல்லூரிப் பேராசிரியர். எம். எசு. பூரணலிங்கம் அவர்கள் அமைச்சர். இதற்காக உலகத் தமிழர்களின் பொருளுதவியை இக்குழு கோரிற்று. இது தொடர்பாக, திருச்சி இம்பீரியல் வைப்பகத்தில் தமிழ்ப் பல்கலைக்கழக வைப்பு என்ற கணக்கும் தொடங்கப்பட்டது. இச்செய்திகள் 1925-ஆம் ஆண்டு, செப்-டம்பர், அக்டோபர் திங்கள் செந்தமிழ்ச் செல்வியில் வெளி வந்துள்ளன.

ஆனால் இக்கனவு அப்பேரறிஞர்கள் காலத்தில் நிறைவேற-வில்லை. 56 ஆண்டுகளுக்குப் பின்னரே அவர்கள் கண்ட தமிழ்ப் பல்கலைக் கழகக் கனவு நனவாகியது. 1981-ஆம் ஆண்டு செப்-டம்பர் 15-இல் அறிஞர் அண்ணா பிறந்த நாளில்தான், தஞ்சையில் இப்பொழுதுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப் பெற்றது.

இப்பல்கலைக் கழகத்தின் அமைப்பும் செயலாண்மையும் பிற பல்கலைக்கழகங்களை ஒத்திருந்தாலும் அதன் குறிக்கோள்கள் பிற பல்கலைக் கழகங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. தமிழ் இலக்கியத்திற்கும் அவற்றின் ஆய்வுகளுக்கும் இஃது ஓர் உயராய்வு மொழிநடுவம். கடல் கடந்து வாழும் தமிழர்களுக்கும் தமிழ்நாட்-டிற்கும் இஃது ஒரு பண்பாட்டுப் பாலம். கலை, இலக்கியம், அறி-வியல், மருத்துவம், பொறியியல், கைத்தொழில்,-போன்ற அனைத்துத் துறைகளின் ஆய்வையும், தமிழ்மொழி, இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவும் ஆய்வுக்களம், தமிழி-லிருந்து பிறமொழிகளுக்கும், பிறமொழிகளிலிருந்து தமிழுக்கும் சிந்தனைப் பரிமாற்றம் நிகழும் துறைமுகம். அச்சுக்கு வராத

Scanned with CamScanner

அரிய சுவடிகள், ஓலைச்சுவடிகள்; கல்வெட்டுகள் ஆகியவற்றைப் பாதுகாத்து ஊருக்கு வழங்கும் ஒளிவிளக்கம். வளர்ந்து வரும் அறிவியல் தேவைகளுக்கு ஏற்பத் தமிழ்மொழியை வளப்படுத்த உதவும் நாற்றங்கால். தமிழ்ப் பண்பாட்டின் ஆய்வுடன் இந்திய நாட்டின் பிற பண்பாட்டுக் கூறுகளில் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்தை அளவிடும் உரைகல்.

காவிரி கொழிக்கும் தஞ்சை மண்ணில் அமைதியான சூழலில் ஆய்வில் மூழ்கிய அறிஞர்களைக் கொண்டு திகழ்கிறது தமிழ்ப் பல்கலைக் கழகம்.

இங்கு பட்ட வகுப்புகள் இல்லை; ஒருங்கிணைந்த கல்லூரிகள் இல்லை. பிற பல்கலைக்கழகங்களில் உள்ள பொதுவான துறைகள் இல்லை. விரிந்து பரந்து நடைபெறும் ஆழ்ந்த ஆய்வுப் பணி மட்டுமே உண்டு. இங்குள்ள துறைகள் ஒவ்வொன்றும் தொன்மையையும் புதுமையையும் சார்ந்து உலக அரங்கில் தமிழை உயர்த்தப் பாடுபடுபவை.

தொடக்கத்தில் இத்தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை-வேந்தர் பர். வ. அய். சுப்பிரமணியம்; இக்கால் இதன் துணை-வேந்தர் பர். ச. அகத்தியலிங்கம்.

தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட நெறிகளின்படி, தமிழ்ப் பல்கலைக்கழகச் செயற்பாட்டை நெறிப்படுத்தவும், வழிப் படுத்தவும் ஆட்சிக்குழு, பொருள்குழு, பேரவை, திட்டக்குழு, புலக்குழு, பாடத்திட்டக்குழு ஆகிய செயலாண்மை அமைப்புகள் உள்ளன. ஒவ்வொரு குழுவிற்கும் உறுப்பினர்களின் பதவிக் காலம் பொதுவாக மூன்றாண்டுகளாகும். இச்செயலாண்மை அமைப்புகளில் நாடறிந்த தமிழ்ச் சான்றோரும், பன்னாட்டு அறிஞர்களும் பங்கு பெற்றுத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை வழி நடத்திச் செல்கின்றனர்.

ஒரு பல்கலைக் கழகத்தின் பல்முனை வளர்ச்சிக்கு விரிந்து பரந்த வளாகம் ஓர் இன்றியமையாத தேவையாகும். இதனைக் கருத்தில் கொண்டு தஞ்சை-திருச்சி நெடுஞ்சாலையின் இரு மருங்-கும் ஆயிரம் குறுக்கம் (ஏக்கர்) நிலப்பரப்பு கையகப்படுத்தப்-பட்டுள்ளது.

இப்பகுதியில் கட்டிடப் பணிகள் தொடங்கும் வரை தஞ்சை அரண்மனையில் அலுவலகமும் துறைகளும் இயங்கி வந்தன. புதிய வளாகத்தில் கட்டிடப் பணிகள் படிப்படியாக முடிவுறும் போது துறைகளும் ஒவ்வொன்றாக அங்கு இடம் பெயர்ந்து வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஐந்து புலங்களுக்கும் ஐந்து பெருங் கட்டிடங்கள் த-மி-ழ்-நா-டு என்னும் ஐந்து எழுத்துகளின் வடிவில் கட்டுவதற்குத் திட்டமிடப் பெற்றது. இதில் தமிழின் சிறப்பு எழுத்தாகிய 'ழ' என்னும் எழுத்துக்கான கட்டிடம் 50 இலக்க உருபா செலவில் கட்டி முடிக்கப் பெற்றது.

நூலகக் கட்டிடம் ஒன்று நாடாளுமன்றக் கட்டிட வடிவில் ஒன்றரைக் கோடி உருபா மதிப்பில் உருவாகியுள்ளது.

ஆட்சியமைப்புக் கட்டிடம் இரண்டு கோடி உருபா மதிப்பில் வானுற ஓங்கி வளர்ந்து வருகிறது.

அலுவலர்கள் குடியிருப்புகளும், மருத்துவமனையும் அங்காடி-யும், விளையாட்டரங்கமும், நாடக அரங்கும், மகளிர் விடுதியும், புல விருந்தகமும் இதுவரை நிறை வெய்திய கட்டிடங்களாகும்.

இவ்வளாகத்தில் தமிழன்னைக்கு ஒரு சிலை எழுப்பவும் மாமன்னன் இராசராசன், கரிகால் சோழன் ஆகியோருக்கு மணிமண்டபங்கள் கட்டவும் ஏற்பாடு நடந்து வருகிறது.

சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த மகர தோரண வாயில் தமிழ்ப் பல்கலைக்கழக நுழைவாயிலை அழகு செய்யும்.

பாலையாகக் காட்சி தந்த ஆயிரம் குறுக்கம் (ஏக்கர்) நிலப் பரப்பு இக்கால் பசுஞ் சோலையாக மாறி வருகிறது.

தமிழ் மொழிக்கு அணி சேர்க்கும் ஐம்பெரும் பாவியங்களைப் போன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அணி சேர்ப்பவை ஐந்து புலங்கள். ஒவ்வொரு புலமும் தன்னுள் நான்கைந்து துறைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு துறையிலும் பேராசிரியர், இணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர்.

I. மொழிப்புலம்: 1. இலக்கியத்துறை. 2. மொழியியல்துறை. 3. நாட்டுப்புறவியல்துறை. 4. இந்திய மொழிகள் நடுவம். 5. மெய்ப்பொருள் நடுவம். 6. மலையின மக்கள் ஆய்வு நடுவம்.

II. சுவடிப்புலம்: 1. ஓலைச்சுவடித்துறை. 2. அரிய கையெழுத்-துச் சுவடித்துறை. 3. கல்வெட்டுத்துறை. 4. நீர்அகழ் ஆய்வு நடுவம்.

III. வளர்தமிழ்ப்புலம்; 1. அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித்-துறை. 2. மொழி பெயர்ப்புத்துறை. 3. தொகுப்பியல்துறை. 4. குமுகவியல்துறை. 5. அறிவியல் தமிழ், தமிழ் வளர்ச்சித் துறை.

IV. கலைப்புலம்: 1. இசைத்துறை. 2. சிற்பத்துறை. 3. நாடகத் துறை.

V. அறிவியல் புலம்: சித்த மருத்துவத்துறை. 2. தொல் தொழில் துறை 3. தொல் அறிவியல்துறை. 4. கட்டிடக் கலைத்துறை. 5. கணிப்பொறி அறிவியல் துறை.

மேற்கண்ட துறைகள் மட்டுமன்றிப் பல்வேறு நீண்டகால, குறுகிய கால ஆய்வுத் திட்டங்கள் கீழ்க்காணும் நடுவங்களாகவும் தனித் துறைகளாகவும் செயல்பட்டு வருகின்றன.

1. களஞ்சிய நடுவம். 2. பெருஞ்சொல் அகராதித்துறை, 3. தூய தமிழ்ச் சொல்லாக்க அகரமுதலிகள் துறை. 4. கழக

இலக்கியப் பொருட்களஞ்சியத் திட்டம். 5. கழக இலக்கிய அகராதித்திட்டம். 6. நாடகக் களஞ்சிய நடுவம். 7. அகவை வந்தோர் கல்வித் துறை.

தமிழ்ப் பல்கலைக் கழகப் பணியாளர்கள்:

| | | | |
|---|---|---|---|
| அலுவலர்கள்: | 14. | இணைப்பேராசிரியர்கள்: | 18. |
| அமைச்சுப் பணியாளர்கள்: | 56. | விரிவுரையாளர்கள்: | 36. |
| தொழில் நுட்பப் பணியாளர்கள்: | 13. | ஆய்வாளர்கள்: | 6. |
| பிற பணியாளர்கள்: | 123. | திட்டப்பணியாளர்கள்: (ஒப்பந்தப்பணி) | 36. |
| பேராசிரியர்கள்: | 17. | | |

தமிழ்ப் பல்கலைக் கழகம் இருவகையான அலுவலர்களைக் கொண்டுள்ளது. துறைகளில் பணியாற்றும் கல்விசார் அலுவலர்கள் ஊதிய அமர்த்தத்தில் தொடர்ந்து பணியாற்றுபவர்கள். இவர்கள் பல்கலைக் கழகத்தின் நடுவான பணியாளர்களாவர். மற்றொரு வகையினர் திட்டங்களில் பணியாற்றுபவர்கள். இவர்கள் திட்டக்கால வரையறைக்குள் பணியாற்றிக் குறிப்பிட்ட ஆய்வுப் பணியைத் திட்டப்பணியை முடித்துச் செல்பவர்கள். இவ்விரு வகை அலுவலர்களும் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளிலும் துறை சார்ந்த திட்டங்களிலும் ஆய்வுப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

மொழியியலுக்கென்று தனியாக இயங்கும் துறை தமிழ் மொழி வரலாறு பற்றிப் பரந்த அளவில் ஆய்வு மேற்கொள்ள முனைந்துள்ளது. மொழியியல் கொள்கைகளை எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் பாடநூல்களை எழுதத் திட்டமிட்டுள்ளது. அதுவன்றித் தமிழ் மொழிக்கென்று 20 தொகுதிகளில் ஒரு புதிய இலக்கண வரிசையை உருவாக்கும் முயற்சியையும் இத்துறை தொடங்கியுள்ளது.

மாறிவரும் அறிவியல், குமுகாய நிலைகளின் தாக்கத்தால் அருகிவரும் நாட்டுப்புற வழக்காறுகளை நிலை நிறுத்தவும் பரவலாக்கவும் நாட்டுப் புறவியல் துறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மாவட்டம் தோறும் சென்று அங்கு வழங்கும் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், வழக்காறுகள் ஆகியவற்றை ஆவணப்படுத்தி, அறிவியல் அடிப்படையில் அவற்றை அலசி ஆராய்ந்து நூல்களாக உருவாக்க முனைந்து வருகிறது.

ஓலைச்சுவடிகளைத் திரட்டுவது, பாதுகாப்பது, ஆராய்வது போன்ற தொண்டையும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஓலைச் சுவடித்துறை தொடர்கிறது. இதுவரை, இத்துறையில் தமிழ், கிரந்தம், தெலுங்கு, மலையாளம், தேவநாகரி, பாலி மொழிகளைச் சேர்ந்த 3400 சுவடிகள் சேர்க்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சுவடிகளைப் பதிப்பிக்கும் பணியும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. இலக்கண சூடாமணி, அகத்தியர் மருத்துவ காவியம், நற்றிணையின் புதிய பதிப்பு ஆகியவை உருவாகி வருகின்றன.

இதுவன்றித் தமிழர் குமுகாய வரலாற்றை 18-ஆம் நூற்றாண்டு முதல், முதல் இந்திய விடுதலை வரை எழுதும் பணியும் மேற்கொள்ளப் பெற்று வருகிறது.

இன்றைய பன்முக வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டும் புதிய பெருஞ்சொல்லகராதி ஒன்றைப் பத்துத் தொகுதிகளில் வெளியிடத் தமிழ்ப் பல்கலைக் கழகம் திட்டமிட்டு முதல் தொகுதியை வெளியிட்டுள்ளது. தமிழ் பயில விரும்புவோருக்கு இது இலக்கணம், வழக்கு சார்ந்த எல்லாச் சொற்களுக்கும் பொருளைத் தருவது மட்டுமின்றி மேற்கோளையும் இலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

தமிழ் மொழியில் பல மொழிச் சொற்கள் பயின்று வருவதால், தமிழ் மொழியின் தனித்தியங்கவல்ல தன்மையை நிலை நிறுத்தும் பொருட்டும், அடிப்படை வேர்ச்சொல் வளத்தையும் பொருள் சிறப்பையும், பரபரப்பையும் நிறுவும் நோக்கத்துடனும் தூயதமிழ் அகரமுதலி ஒன்று நான்கு தொகுதிகளில் உருவாகி வருகிறது.

தமிழ் மொழிக்கு இதுவரை புனையப் பெற்ற கலைச் சொற்கள் ஏராளம்! ஏராளம்! ஆனால், அவை முறையாகத் தொகுக்கப்படவில்லை. அறிவியலின் விரைந்த வளர்ச்சிக்கு ஈடுசெய்யும் வகையில் தமிழில் கலைச்சொல் உருவாக்கத்திற்குச் சில அடிப்படைக் கொள்கைகளை அமைத்துக் கொண்டு, கலைச்சொல் அகராதி ஒன்று தொகுக்கப் பெற்று வருகிறது. இதில் ஓரிலக்கம் கலைச்சொற்கள் தூயதமிழ் சொல்லாக்கம் பெற்றுள்ளன.

மேற்கண்ட இரண்டு தூயதமிழ் அகராதிகளையும்தாம் தனித் தொகுப்பாசிரியர் பொறுப்பேற்று, நம், சொல்லாய்வுப் பேரறிஞர் ப. அருளி அவர்கள், நம் தனிச் செந்தமிழ்க்கு இதுவரை இல்லாத பேராக்கமாகத் தொகுத்து வருகிறார்கள்.

இவையன்றிக் கழக இலக்கிய அகராதி ஒன்றும் கணிப்பொறியின் துணைக் கொண்டு உருவாக்கப் பெற்று வருகிறது. இதில் கழக இலக்கியங்களில் பயின்று வரும் அனைத்துச் சொற்களும் மேற்கோள்களோடு பொருள் கூறப் பெற்றுள்ளன.

இனி, இதுவுமன்றித் தமிழ்க் குமுகாயத்தின் அன்றாடத் தேவையைக் கருத்தில் கொண்டு, தமிழ்க் கையகராதி ஒன்று, தொகுப்பியல் துறையால் உருவாக்கப் பெற்று வருகிறது. இத்துறை முன்னமேயே மரஇனப் பெயர்த்தொகுதி ஒன்றை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

இவ்வகராதிகள் அனைத்தும் தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் உலகெங்கும் பயின்றுவிக்க உறுதுணையான கருவிகளாய் அமையும் என்று நம்பலாம்.

உலகின் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றான தமிழ் மொழிக்கு என முதன்முதலாகத் தமிழ் வளர்ச்சிக் கழகம் 1947 முதல் 1968 வரை 10 தொகுதிகளில் களஞ்சியங்களை வெளியிட்டது.

உலகிலுள்ள பிறமொழிக் களஞ்சியங்கள் 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை அவ்வத் துறைகளில் காலந்தோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், புதிய செய்திகளையும் உள்ளடக்கி மறுபதிப்புகளாக வெளியிடப் பெறுகின்றன. இவ்வகையில் உருவாக்கப்பட வேண்டிய கட்டாயம் நேர்ந்துள்ளது. இவற்றை உருவாக்கும் பணியைத் தமிழக அரசு தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.

தமிழ்ப் பல்கலைக் கழகம் முறையாகத் திட்டமிட்டுப் பல்கலைக் கழகம் பல்துறை வல்லுநர்களின் துணையோடு தொகுதி ஒன்றுக்கு ஆயிரம் பக்கங்கள் கொண்ட வாழ்வியற் களஞ்சியம் 20 தொகுதிகளையும் உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இவற்றுள் வாழ்வியல் களஞ்சியம் எட்டுத் தொகுதிகளும், அறிவியற் களஞ்சியம் நான்கு தொகுதிகளும் வெளியாகிவிட்டன. பிற தொகுதிகளும் உருவாகி வருகின்றன.

கழக இலக்கியப் பொருட்களஞ்சியம் ஒன்றை நான்கு தொகுதிகளில், மூவாயிரம் பக்கங்களில் உருவாக்கத் திட்டமிட்டு மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுவிட்டன. இவற்றின் ஆங்கில ஆக்கமும் இணைந்த பணியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாடகக்கலை பற்றிய விரிவான நாடகக் களஞ்சியம் ஒன்றை மூன்று தொகுதிகளில் உருவாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டுக் கோயில்கள் பற்றிய செய்திகள் அடங்கிய கோயிற் களஞ்சியம் ஒன்றினைத் தொகுக்கும் பணி திட்டமிடப்பட்டுச் செங்கற்பட்டு மாவட்டக் கோயில்களில் முதல் தொகுப்பு முடிவுறும் தறுவாயில் உள்ளது.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இசைத்துறை, தமிழிசை பற்றிய ஆய்வை மேற்கொண்டு தமிழ் நாட்டின் இசை வரலாற்றினை மூன்று தொகுதிகளில் எழுத முனைந்துள்ளது. தமிழில் புதிய பண்கள் (இராகங்கள்) கண்டுபிடிக்கப்பட்டு அவை நூல் வடிவிலும் வெளியிடப் பெற்றுள்ளன. இசை ஆவணக் காப்பகம் ஒன்று நிறுவி, அதில் புகழ் பெற்ற இசைக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பெற்று ஆவணப்படுத்தப்பெற்று வருகின்றன.

நாடகத்துறையில் சிற்றூர்ப்புறக் கலைகள் மற்றும் புதின மேடை நாடக உத்திகள், தமிழ் நாடக வரலாறு, தெருக்கூத்து, இருபதாம் நூற்றாண்டு நாடகக்கலை வளர்ச்சி பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிய உத்திகளைக் கண்டு நாடகக்

Scanned with CamScanner

கலைக்கு அரண் சேர்ப்பதும் நாடகத்துறையின் பணியாக உள்ளது.

தென்னாட்டுக் கோயில்களில் உள்ள சிற்பக் கலைகளின் சிறப்பும் அவை பிற மாநிலச் சிற்பக் கலைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கமும் வரலாற்று அடிப்படையில் ஆய்வு செய்யப் பெறுகின்றன. தமிழ் நாட்டின் சிற்பக் கலைகளை வரன்முறையாக, அறிவியல் அடிப்படையில் ஆய்ந்தும், ஆய்ந்தவற்றை நூல் வடிவில் கொண்டு வருவதும் சிற்பத் துறையின் சிறந்த பணிகளாகும்.

கட்டிடக் கலைத்துறை தமிழகக் கட்டிடக் கலையையும் பிற நாட்டுக் கட்டிடக் கலைகளையும் ஒப்பிட்டு ஆய்ந்து வருகிறது. தஞ்சைக் கோயில்கள் பற்றிய ஓர் ஆய்வு முடிவடைந்துள்ளது.

தமிழுக்கு வளம் சேர்க்கப் பல்வேறு அறிவியல் மருத்துவ நூல்கள் தமிழ்நாட்டு மாணவரின் தேவைக்கேற்ப மொழி-பெயர்க்கப்பட்டும் தமிழில் உருவாக்கப் பெற்றும் உள்ளன.

இதுவரை தமிழ்ப் பல்கலைக்கழகம் 13 பொறியியல் நூல்களை-யும், 14 மருத்துவ நூல்களையும் உருவாக்கியுள்ளது. இவற்றில் 4 மருத்துவ நூல்கள் அச்சில் வெளிவந்துவிட்டன. மற்றவை தேவைக்கேற்ப முன்னுரிமை கொடுத்து வெளியிடப்பெற உள்ளன.

அறிவியல் தமிழ், தமிழ் வளர்ச்சித்துறை என்ற புதிய துறை அறிவியல் தமிழை வளர்க்க முனைந்து பல ஆக்கப்பணிகளில் ஈடு-பட்டு வருகிறது.

உலக மொழியாகிய ஆங்கிலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, பாரதிப் பாடல்கள், பெரிய புராணம், திருக்-கோவையார் ஆகிய இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டு அச்சில் உள்ளன. ஏற்கனவே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்-பட்ட பத்துப்பாட்டு நூல் தேவை கருதி மறுபதிப்பாக வெளிக் கொணரப்பட்டுள்ளது. போப்பின் திருக்குறள் ஆங்கில மொழி-பெயர்ப்பு கையடக்கப்படியாக மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது. பிற கழக இலக்கியங்களை ஆங்கிலத்தில் பெயர்க்கும் பணியும் திட்டமிடப் பெற்றுள்ளது.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறை, இதுவரை பல அகழாய்வுகளை நிகழ்த்தியுள்ளது. தஞ்சையை அடுத்த வல்லம் கோட்டையில் நிகழ்ந்த அகழாய்வில் கி. பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த குடியிருப்புகளின் சான்றுகள் கிடைத்-துள்ளன.

பெரியார் மாவட்டக் கொடுமணல் சிற்றூரில் நடந்த அகழாய்வில் கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொழிற் கூடங்கள் இருந்ததற்கான சான்றுகளும், அரிய அணிமணிகளும், இரும்பு, செப்புப் பொருள்களும், உரோமானிய நாட்டுத் தொடர்பைப் புலப்படுத்தும் பானைச் சில்லுகளும் கிடைத்-துள்ளன.

இவ்வகழ்வாய்வுகளின் முடிவுகளும், பிற கல்வெட்டுக் கண்டு பிடிப்புகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவை தமிழர் வரலாற்றுக்கு உறுதுணையான அடிப்படைகளாகும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க நடுவம் ஒன்று மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ளது. அது நீர்அகழாய்வு நடுவமாகும். அறிவியலில் புதிய துறையாகிய இத்துறை தென்னகத்திலேயே முதலாவதாகும். கடல் கடந்த தமிழரின் அன்றையக் கடற்செலவுச் சிறப்பையும், நாகரிகச் சிறப்பையும் கடலகழாய்வு மூலம்தான் கண்டறிய முடியும்.

புதையுண்ட பூம்புகார் இன்னும் உலகுக்கு ஒளித்து வைத்திருப்பவை ஏராளம். செலவு மிகுந்த இந்த நீர் அகழ்வாய்வுக்குக் காலம் இன்னும் கனிந்து வரவில்லையாயினும் கீழைக் கடற்கரையில் தொண்டிக் கடலில் இரண்டு கல்லெடை (டன்) எடையுள்ள இரும்பு நங்கூரமும், குருசடைத் தீவுக்கருகில் ஒன்றரைக் கல்லெடை(டன்) எடையுள்ள கருங்கல் நங்கூரமும் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளன.

இக் கல்நங்கூரத்தின் காலம் கி.மு. 15-ஆம் நூற்றாண்டு என்ற விளத்தமும், கிழக்குக் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் கல் நங்கூரம் என்ற பெருமையும் இந்நடுவத்துக்குக் கிடைத்துள்ளன. இந்நங்கூரத்தைப் பற்றிய தொல்லியல் ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஒரு நாட்டின் பண்பாட்டில் பழங்குடியினர்க்கு மிகுந்த பங்குண்டு. தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் பண்பாட்டுக் கூறுகளைக் காத்து வருபவர் பழங்குடி மக்களே! 1971-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கின்படி தமிழ்நாட்டின் பழங்குடி மக்கள் தொகை ஐந்து இலக்கங்களாகும்.

இந்திய அரசு பழங்குடி மக்களின் மேம்பாட்டுக்காகப் பழங்குடி மக்களின் ஆய்வு நடுவங்களை மாநில அரசின் மேற்பார்வையில் நடத்தி வருகின்றது. குசராத்து மாநிலத்திலும், தமிழ் நாட்டிலுந்தான் இப்பணி பல்கலைக் கழகங்களிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

1983-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் பக்கல் தமிழ்ப் பல்கலைக் கழகம் உதகையில் மலையின் மக்கள் ஆய்வு நடுவத்தைத் தொடங்கிற்று. மலையின மக்கள் பற்றிய ஆய்வை மேற்கொள்ளுதல், வளர்ச்சித் திட்டங்களை மதிப்பீடு செய்தல், மலையின மக்கள் மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல் ஆகிய குறிக்கோளுடன் இந்நடுவம் செயல்பட்டு வருகிறது. பெரும் அருங்காட்சியகம் ஒன்றை அமைத்துப் பழங்குடி மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.

இவையன்றித் தமிழ்நாட்டுச் சித்தர்கள் உருவாக்கிய மருத்துவ முறைகள் தமிழகத்தில் பண்டு தொட்டே நடைமுறையில்

# ஒரு தனி மடல்!
# ஆனால் பொது மடல்!

கலைமாமணி, தமிழாகரர், பேராசிரியர்
பர். ஆறு. அழகப்பன், க.மு. இலக்.மு.,
தலைவர், தமிழியல் துறை,

அண்ணாமலை நகர்
2-9-1989
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

மு. சிவம் என்ற பெயரில் உலவும் திரு. மு. சதாசிவம் என்பவருக்கு,

29-8-1989 தினமணிச் செய்தியில் நீர் சரசுவதிமகாலின் நூலக இயக்குநராக அமர்த்தப்பட்டீர்கள் என்ற செய்தி அறிந்தோம். அன்றைய பொழுது விடியாமல் இருந்திருக்கக் கூடாதா என்ற நினைவு எம்மை விட்டு இன்னும் அகலவில்லை. பட்டாணிக் கடலைக்காரனுக்குப் பரிசுச் சீட்டில் பரிசு விழுந்தது போல, உமது போலி வாழ்க்கைக் குறிப்பு, பொறுப்புமிக்க இப்பதவியைத் தேடித்தந்திருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நீர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அழைக்காமல் மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வந்துள்ளன. இயற்கையின் கொடையான மூலிகைகளை நோய்தீர்க்கும் மருந்தாகப் பயன்படுத்தும் முறைகள் பற்றி எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் தமிழகமெங்கும் சிதறிக்கிடக்கின்றன. இவற்றைத் திரட்டிப் பொருளுடன் பதிப்பிக்கும் பணியில் சித்த மருத்துவத்துறை முனைந்துள்ளது.

அருகிவரும் தமிழ் மூலிகைகளை அடையாளம் கண்டு பாதுகாப்பதற்கும் அவற்றின் பயன்பாடுகளை இக்கால அறிவியலின் துணைக் கொண்டு ஆய்ந்தறிவதற்காகவும் ஒரு மூலிகைப் பண்ணை 50 குறுக்கம் (ஏக்கர்) பரப்பில் உருவாக்கப்பட்டு வருகிறது. இத்துறையின் ஆய்வுப் பணிகளை நிலைத்திணையியல் வல்லுநரும், உயிர்வேதியியல் ஆய்வாளரும், சித்தமருத்துவரும் ஒருங்கிணைந்து நடத்தி வருகின்றனர்.

இனி பண்டைத் தொழிற் பெருமையை உலகுக்குக் கற்பிக்கும் முயற்சியில் தொல்தொழில்துறை ''தென்னிந்தியக் கடல்கள் வரலாறு,'' ''பழந்தமிழகத்தில் இரும்புத் தொழில்'' ஆகிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. தொல் அறிவியல்துறை இலக்கியக் கால மீன்களும், இக்கால மீன்களும்......''பழந்தமிழ் நூல்களில் கூறப்படும் உயிரினங்களின் மருத்துவப் பயன்பாடுகள்'' ஆகிய ஆய்வுகளையும், இருப்பிட மரங்களைப் பற்றிய ஆய்வையும் மேற்கொண்டுள்ளன. கழக இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மரம், செடி, கொடிகளைத் தருவித்துக் கழக இலக்கிய நிலைத்திணைப் பூங்கா (Botanical Garden) ஒன்றினை உருவாக்கும் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

வந்து கலந்து கொண்டு செய்த பண்புக்குக் குறைவான செயல்களை நீர் நடத்திவரும் ''பச்சை நாடாத்'' தாளிகையான 'வளரும் தமிழி'ல் எழுதியிருந்தீர். உம் செயல்களை உடனுக்குடன் உம் கல்லூரி அமைப்புக் குழுவினர் பார்வைக்கும் கொண்டு வந்தோம். அவர்களும் கல்லூரிக் களர்நிலத்தில் விளையும் காளானாக நினைத்துக், கண்டு கொள்ளாது விட்டு விட்டனர் போலும்!

இப்பொழுது நீர் பின்வரும் அமைப்புக்கு உட்பட்ட அதிகாரியாக உள்ளீர்.

Tamilnadu Societies Registration Act-1975 (Act 27 of 1975)ஐ மேலும் அரசு வெளியிட்ட,

G. O. Ms. No. 209 Education Science and Technology Department (K1) Dated 1-2-1983

என்ற கட்டளைக் கேற்பப் பணிபுரியும் அரசு அதிகாரியும் ஆவீர். ஈரோட்டில் நீர் செய்த அடாவடித்தனத்திற்கெல்லாம் மலர் தூவியது போல சரசுவதி மகாலின் நூலக அமைப்புக் குழுவினர் தூவமாட்டார்கள்.

இதுவரை உமது தூவலும், எண்ணமும் தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்களை ஏசுதல், மொழி ஞாயிறு, பாவலர், பெருஞ்சித்திரனார் போன்ற அறிஞர்களைச் சாடுதல், வயிற்றைக் கழுவச் சிலருக்கு வாழ்த்துப்பா பாடுதல் இவ்வகையிலேயே கழிந்துள்ளன.

திறந்த வெளியில் தீனி தேடி அலைந்த நீர், இனிபழமைமிக்க ஆய்வுக்கூடத்தில் 'கூர்மாவதார'மென உட்கார்ந்துள்ளதாக நினைக்க வேண்டாம்.

சரசுவதி மகால் நூலகம் பன்மொழிகளில் முப்பத்தெட்டாயிரம் நூல்கள் உள்ள சிறப்புடையது. (இவற்றில் இரண்டாம் சரபோசியால் 4,218 நூல்கள் திரட்டப் பட்டன).

அச்சிட வேண்டிய நூல்கலாக ஓலைவடிவிலும், தாள் வடிவிலும், சமசுக்கிருதத்தில் 36,923 படிகளும், தமிழில் 2,991 படிகளும், தெலுங்கில் 766 படிகளும், மராத்தியில் 3,060 படிகளும் ஆக மொத்தம் 43,740 எழுத்து வடிவப் படிவங்கள் உள்ளன. பதினைந்துக்கு மேற்பட்ட பதிப்பாசிரியர்களையும், நாற்பதுக்கு மேற்பட்ட சிறப்பாசிரியர்களையும் கொண்டு தற்போது சரசுவதி மகால் விளங்குகிறது.

மோடி மொழியில் மட்டும் பதிப்பிக்க வேண்டிய செல்வங்கள் 850 தொகுதிகள் உள்ளன. அச்சு, படப்படி படம் எடுத்தல், நூலைப் படத்தில் பதிவு செய்தல், விற்பனைப் பகுதி ஆக இப்படிப் பல பகுதிகளும் உள்ளன. எங்குமே இல்லாத அரிய நூல்கள் இந்நூலகத்தில் உள்ளன என்ற பெருமை கொண்டது. புகழ்மிக்க தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் பெருமையை ஏன் இவ்வாறு குறிப்பிடுகிறேன் என்றால்,உமது அறையில் அமர்ந்து உமது

''பச்சை நாடாத்''; தாளிகைக்குப் பிறரைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் எழுதிக் கொண்டிருப்பீர். இனியாவது அதை விட்டுவிட வேண்டும் என்பதற்காகக் குறிப்பிடுகிறேன். நீர் செய்ய வேண்டிய முதல் வேலை காலையில் வந்து மாலையில் திரும்பும் பொழுது செய்த வேலையைக் குறிப்பேட்டில் எழுதிக் கொண்டு வருவதுதான். உமக்குக் கீழ் உள்ள பணியாளர்க்களை குறிப்புகள் எழுதச் சொல்லிவிட்டு உமது மனைவியின் பெயரில் நடத்தும் தாளிகைகளுக்குச் சரசுவதி மகாலின் நூலக இயக்குநர் அறையைப் பயன்படுத்தாதீர். விடுமுறை நாளான அறிவன் கிழமையைக் கூட நூலகத்தில் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும். மீண்டும் மீண்டும் இத் தவற்றை நீர் செய்தால், இந் நூலகம் உருவாகத் தந்தையாக விளங்கிய சரபோசி பேரரசின் (1798-1832) இன்னுயிர் உம்மை மன்னிக்காது. மேலும் அங்குப் பணிபுரியும் நாற்பது பணியாளர்களைப் பற்றி நாற்றமிழால் ஏதாவது உமது தாளிகைகளுக்கு எழுதிக் கொண்டிருக்காதீர். பழைய பணியில் செயல் பட்டால் கல்வி அரசி கலைவாணியும் கண்ணீர் விடுவாள். நாற்றமிழில் கருத்தரங்குகளில் நீர் கட்டுரை படித்ததால்தான் முனைவர். வ.சுப. அவர்கள் மாநாடுகளில் கட்டுரைகளைத் தணிக்கை செய்யும்நெறியைக் கொண்டு வந்தார்.

(முனைவர்) பட்டம் பெற்றவர்தாம் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் 250 பேர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். அவர்கள் வேண்டுகோள் விடாதது வருத்தத்திற்குரியதே. அத்தகுதியற்ற உமக்கு மாலை சூடப்பட்டுள்ளது. உமது 'எம். லிட்' அளவு, மாரியம்மன் தாலாட்டுப் போல எழுதிய பொத்தக எண்ணிக்கைகள், பல மொழிகளின் அகரவரிசை தெரியாமல் தம்மைத்தாமே பன்மொழிப்புலவர் என்று அழைத்துக் கொள்வது, போன்ற பொய்வாழ்க்கைக் குறிப்பை நான் இங்கே விரிவாகச் சுட்டிக் காட்டவில்லை. உமது புலமையின் நீள அகலம் தமிழுலகம் அறியாதது அல்ல. இதுவரை கலந்துக் கொண்ட மாநாடுகளிலெல்லாம் உமது பொத்தகங்களைத் தூக்கிச் சென்று விற்கும் பொத்தக வணிகராகவே இருந்தீரே தவிர, ஆய்வாளராக இருந்ததில்லை. சரசுவதி மகாலின் நூல் விற்கும் பொழுது உமது நூல்களையும் சேர்த்து விற்கக் கூடாது என்பதற்காக இதனைத் தெரிவிக்கிறேன்.

இப்பொழுது அரசு அதிகாரியாகக்கூடுவிட்டுக் கூடுபாய்ந்துள்ள நீர் பின்வரும் கேள்விகளுக்கு ஒளிவு மறைவில்லாமல் சொல்ல வேண்டும்.

1. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கு (1987) நீர் அழைக்கப்பட்டீரா? அழைக்கப்படாத நிலையில் மற்றவர் அறைகளில் தங்குதல், பரிசுப் பொருள்கள் கேட்டல், போக்குவரத்துச்செலவு கேட்டல், மீறிச்சென்று உணவு உண்ணல் முதலிய பன்பாட்டுக்-குறையான செயல்களைச் செய்ததுண்டா?

Scanned with CamScanner

2. சூன் 3-4-1989-இல் அண்ணாமலை நகரில் நடைபெற்ற 21-ஆவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மாநாட்டிற்கு நீர் அனுப்பிய நுழைவுக் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்படாமல் பொருளாளர் திரு. செ. வை. சண்முகம் அவர்களால் திருப்பி அனுப்பப்பட்டதா?

பேராளராக ஏற்றுக் கொள்ளாத பிறகு மாநாட்டிற்கு எல்லைமீறி வந்து உணவுச் சீட்டில்லாமல் உணவு உண்ணுதல், மற்றவர் அறையில் நுழைந்து தங்குதல், பரிசுப் பொருளுக்கு அலைதல் போன்றவற்றைச் செய்ததுண்டா?

அடிப்படையிலேயே பேராளர் உரிமையை இழந்த நீர், அம்மாநாடு தொடர்பாகப் பொய்ச்செய்திகளை 1989 சூன், சூலை, ஆகத்து ஆகிய உம் 'வளரும் தமிழ்' இதழ்களில் அம்மாநாடு பற்றியும், தமிழ்த்துறை பற்றியும், பேராசிரியர் பற்றியும் சாய்க்கடை மொழியில் எழுதி மகிழ்ந்ததுண்டா?

ஓர் அரசு அதிகாரியாக உள்ள நீர் அவ்விதழ்களில் செய்திகளை எழுதி வெளியிட்டது நானே என்று எழுத்து மூலம் எழுதித்தர உமக்குத் துணிவு உண்டா? உண்மை பேச வேண்டிய அரசு அதிகாரியான நீர் முதற்கட்டமாக இதற்கு விடையை ஒரு கிழமையில் கூறும். இக்கடிதத்தில் சுட்டிக் காட்டிய உண்மைகள் உம்மைச் சுடலாம். இனியாவது உண்மையைப் புதைக்க முடியாது என்று உணரவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தின் வளத்தை நாட்டுப்புறப்பாடல் பின்வருமாறு தெரிவிக்கிறது.

''சோறு கொண்டு மதகு அடைக்கும் சொர்ணகிரி நாடு
கஞ்சி கொண்டு மதகு அடைக்கும் காவிரிப் பூம்பட்டிணம்''

தஞ்சைத் தரையில், நாளும் பொழுதும் மாவிலைத் தோரணங்கள் கட்டித் தார் வாழை கட்டி, மங்கல ஒலிகள் கேட்டுக் கொண்டே இருக்கும். 1987, 1989 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மாநாட்டுக் கருத்தரங்குகளில், அழையாமல் வந்து கலந்து கொண்டு போக்கு வரத்துச் செலவு கேட்டல், பரிசுப் பொருள் கேட்டல், உணவு உண்ணல், பிறர் அறைகளில் தங்குதல், போன்ற பண்பியல் குறைவான நடவடிக்கையில் ஈடுபட்டது போலத் தஞ்சைத் தரையிலும் ஈடுபடாதீர். ஈரோட்டிற்குப் பல பெருமைகள் உண்டு. முன்னோர் சேர்த்த பெருமை உம்மால் குறைந்து வருகிறது என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்

உமது பதவி அமர்த்ததைத் தமிழகத்தில் உள்ள எந்தக் குடிமகனும் அறைகூவல் விடுத்து வழக்கு மன்றத்தில் தவறு என்று வழக்காடி வெற்றி பெறமுடியும். அவ்வளவு தவறான வாழ்க்கைக் குறிப்புகள் உம்முடையவை.

வீழ்ந்த சோழப் பேரரசைப் பிற்காலத்தில் சோழன் விசயாலயன் நிமிர்த்திக் காட்டி வல்லரசாக்கினான். இவ்வரலாறு உமக்குத் தெரிந்திருக்க ஞாயமில்லை. அடுத்தவனிடம் ஓட்டை உள்ளதா என்று பூதக்கண்ணாடி போட்டே பழக்கமான பண்புடையவர் நீர். சரசுவதி மகாலை ஆய்வாளர்களின் வேடந்தாங்கலாக உம்மால் ஒரு போதும் ஆக்கவே முடியாது.

இக்கடிதத்தில் நான் எழுப்பிய வினாக்களுக்கு விடை எழுதுவது சிவத் தொழில்; எழுதாவிட்டால் எப்பொழுதும் நீர் செய்யும் அ(ச)வத் தொழில்.

இப்படிக்கு,
(ஓம்.) ஆறு. அழகப்பன்

(ஆசிரியர் குறிப்பு: தனியார்க்கு எழுதிய பொதுநலம் கருதிய இம்மடலின் படியொன்று தென்மொழிப் பார்வைக்கும் பதிப்பிற்கும் வந்ததால் இங்கு வெளியிடப் பெறுகிறது.)

## தமிழ்ப் பல்கலைக்கழகம் செய்ய வேண்டுவன!

1. மதுரை, கரந்தை, நெல்லை முதலிய நகரத் தொடர்புள்ள தமிழ்க் கழகங்களும், தமிழ்நாட்டு அரசுத் தமிழ் வளர்ச்சியாராய்ச்சிக் கழகமும், அனைத்துலகத் தமிழராய்ச்சிக் கழகமும்—பிறவும் ஒன்று சேர்ந்து பழைய பாண்டியன் தமிழ்க் கழகம் போல் இயங்குதல் வேண்டும்.

2. உண்மையான தமிழ் வரலாறு, தமிழிலக்கிய வரலாறு, தமிழ் நாட்டு வரலாறு ஆகிய மூவரலாறும் விரிவாக எழுதப் பெறல் வேண்டும்.

3. இசை, நாடகம், கணியம், ஐந்திறம் (பஞ்சாங்கம்), சிற்பம் முதலிய பழந்தமிழ்க் கலைகளைத் தக்க அறிஞரைக் கொண்டு தனித் தமிழில் எழுதுவிக்க வேண்டும்.

4. தமிழையும் 21 திராவிட மொழிகளையும் ஆராய்ச்சி முறையில் கற்பிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5. தொல்காப்பியவுரைகள் பலவிடத்து வேறுபட்டும், சிலவிடத்து வழுவியும், இக்கால மாணவர்க்கு எளிதாய் விளங்காத நடையிலும் இருப்பதால், இலக்கணப் பெரும் புலவரையெல்லாரையும் ஒன்று கூட்டி, ஒரே புதிய, திருந்திய விளக்கமான தெளிநடை, விரிவுரை வரைவிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

6. மேலையறிவியல் கம்மியக் குறியீடுகளையெல்லாம் மொழி பெயர்க்கவும், அவ்வப்போது வேண்டிய புதுச் சொற்களைப் புனையவும், அறிவியல் திறவோரும், தனித் தமிழ் வல்லுநரும் கொண்ட ஒரு நிலையான குழுவை அமர்த்தல் வேண்டும்.

—நன்றி 'கலைச்சொல்': மலர் 1: இதழ் 1.

# வழக்குரை காதை!

(மூலம்: பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களின் பாவியக் கொத்து.)

(நாடக ஆக்கம்-அதியமான்)

உறுப்பினர்: மக்கள் கூட்டம், கூட்டத் தலைவர்: பேச்சாளர் ஒருவர்.

இடம்: திடல்.

காலம்: இரவு 8 மணி.

நிலை: (வேல்மார்பனை விடுதலை செய்யக் கோரிக் கூட்டம் நடைபெறுகிறது.]

பேச்-ஒரு: (பேசுகிறுர்) வேல்மார்பனை விடுதலை செய்யக் கூட்டப்பட்ட கூட்டத் தலைவர் அவர்களே, அன்புத் தமிழ் நெஞ்சங்களே, நன்றி. இக்கூட்டத்தின் நோக்கத்தை அறிவோம். பாரதம் என்ற இந்தியாவோடு தமிழகம் ஒட்டி இருப்பதால், எதற்கெடுத்தாலும் இந்தியாவை ஆளும் வடவனிடம் கெஞ்ச வேண்டியிருக்கிறது. அவனுடைய மொழி இந்தியை நம்மைப் படிக்கச் சொல்லுகிறுன். நமக்குள்ள உரிமைகளைத் தர மறுக்கிறுன். அதை ஏன், என்று கேட்ட வேல்மார்பனைச் சிறையிலடைத்து, நாளும் வன்கொலை செய்கிறுர்கள். உசாவலில் ஒறுக்க வழி இல்லாமல் குப்பையைப் பொறுக்குவதுபோலக் குற்றங்களை தேடுகிறுர்கள். இந்த நிலமும், இதன் பொருள்களும், நமக்கே சொந்தமாக வேண்டும். நம் மொழியையே நமக்குச் சொந்தமாக்க வேண்டும். வேற்று மொழியைப் படிக்கத் திணிக்கிறுர்கள். இதைக் கேட்க நமக்கு உரிமையில்லை. என்ன? நாமெல்லாம் ஊமைகளா? அல்லது சொத்தைகளா? தமிழ்நாட்டில் சாதியால் ஒன்றுபட முடியாது. சமயத்தால்கூட இயலாது. தமிழால்தான் ஒன்றுபட முடியும். அயலவனை வென்று எல்லாம் எல்லாருக்கும் என்ற நிலைவரும் வரை போராடுவோம். வேல்மார்பன்...

மக்-கூட்: வாழ்க!

கூட்-தலை: வேல்மார்பனை...

மக்-கூட்: விடுதலைசெய்!

பேச்: எங்கள் உரிமையை...

மக்-கூட்: எங்களுக்கு வழங்கு!

பேச்: எழுத்துரிமை, பேச்சுரிமையை...

மக்-கூட்: தடுக்காதே!

பேச்: வாழ்க தமிழ்! இத்துடன் கூட்டத்தை முடிக்கிறேன். (திரை)

காட்சி கூ

உறுப்பினர்: வேல்மார்பன், நடுவர், அரசு வழக்குரைஞர், காவலர் இருவர், மக்கள் கூட்டம், பாடுபவன் ஒருவன்...

Scanned with CamScanner

இடம்: வழக்குமன்றம்.
காலம்: காலை 10 மணி.
(வேல்மார்பனைக் காவலர் இருவர் தொடரியால் பிணைத்து வழக்குமன்றத்திற்கு இழுத்துக் கொண்டு வருகிறார்கள். குற்றக் கூண்டில் நிறுத்துகிறார்கள்.)

அ.வ.உ: வேல்மார்பனே! நேற்று இந்தியாவிலிருந்து தமிழகம் தனியாக வேண்டும் என்று முழங்கினாய். துடுக்காகப் பேசி அடுக்காத சொற்களைப்புனைந்தாய். இந்நிலத்தின் பொருள்கள் யாவும் பொது உடைமையாக வேண்டும் என்றாய். அப்படி இல்லாமையால் இழுக்கு என்றாய். நான் கேட்கிறேன். இப்போது இழுக்கு என்ன வந்தது?

வே.மா: தேன் போன்ற தென்மொழித் தமிழைப் பேசும் சிறுவன் வாயில் கசக்கும் இந்தியைத் திணிப்பதும், அதைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதும், குமட்டும் இந்தியை வாய்களில் கொட்டி வைக்க எண்ணுவதும் இழுக்கு என்கிறேன்.

அ.வ.உ: புதுமொழியைப் படிப்பதால் தவறில்லையே! இந்தியாவில் வாழ இந்தி வேண்டும். அது ஓர் அறிவியல் மொழியென்று அவர்கள் கூறுகிறார்கள்.

வே.மா: சிரிக்க வேண்டிய இடம் இது. அவர்கள் சொல்வதெல்லாம் உண்மையா? இந்தியா விடுதலை அடையும்போது இந்தி வளர்ச்சியடைய பத்து ஆண்டுகள் வேண்டுமென்றனர். நாற்பது ஆண்டுகள் ஆகியும் இந்தி பிஞ்சாகத்தான் இருக்கிறது. இந்தக் கால நீடிப்பைப் பார்த்தால் அது வெம்பி விட்டது. பின் அதில் அறிவியல் எப்படி நுழைந்தது? அப்படிப்பட்ட சூத்தை மொழி, அந்தப் புதுமொழி இப்போது என்ன தேவை? நீங்களே கூறுகிறீர்கள்; அது புது மொழியென்று. பழம் பெருமைமொழி தமிழிருக்க ஒரு புது மொழி எங்களுக்கு வேண்டவே வேண்டாம்.

அ.வ.உ: அயலவன் ஆண்ட பெரும் பாரதத்தை மீட்டோம், அந்த உரிமை காக்க ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமையை வளர்க்க இந்தி வேண்டும். எனவே அதைப் படிக்க வேண்டும். இந்தி என்ன அயலவன் மொழியா?

வே.மா: ஆங்கிலம் எப்படி அயலவன் மொழியோ, அதுபோல இந்தியும் அயலவன் மொழிதான். அவனவன் பேசும் மொழியே அவனவனை ஒற்றுமைப் படுத்தும். அவனவன் மொழியிலேதான் அவனவன் உணர்ச்சி பெற முடியும். ஆங்கிலவனை விரட்ட ஆங்கில மொழியா உணர்வை ஊட்டியது. அவனவன் மொழி வழிதான் உணர்வைப் பெற்றான். உணர்ச்சியால் அவனை அவனூருக்கு அனுப்பினோம். தமிழினிச்சாகும் என்று சொன்னவுடனே தமிழன் கூடினான். இந்தியை ஆங்கிலம் அழிக்கும் என்பதால்தான் அவன்

ஆங்கிலேயனை விரட்ட ஒன்று பட்டான். வங்காளி ஆங்கிலத்தால் அவன் மொழி அழிந்துவிடும் என்பதால்தான் அவனும் நம்மோடு கூடினான். ஆக எல்லோரும் அவனவன் மொழி அழியும் என்பதால்தான் ஆங்கிலேயனைப் பொது எதிரியாக நினைத்து ஒன்றுபட்டு விரட்டினோம். இந்திக்காரன் ஆங்கிலத்தால் தமிழ்மொழி அழியும் என்று நம்மோடு ஒன்றினான்? இல்லையே. ஆங்கிலேயன் ஆட்சியை நன்கு உன்னிப் பார்த்தால், அவன் செய்த நன்மைகள் மிகுதியாக உண்டு. உரிமை வேண்டும் என்பதால்தான் எல்லோரும் ஒற்றுமையாக நின்று அவனை விரட்டினோம். சீனன் வாலைக் காட்டினானே: நாங்கள் என்ன சும்மாவா இருந்தோம். அவனை விரட்ட ஒன்று பட்டோமே. அப்போது இந்தியைப் படித்து விட்டா ஒற்றுமையானோம். இப்போது மட்டும் ஒற்றுமைக்கு இந்தியைப் படிக்க அஃதென்ன ஒற்றுமைப் பெட்டியா? இந்தியைப் படித்து விட்டா பாக்கித்தானை விரட்டினோம்? நீங்கள் படி என்றீர்கள், நாங்கள் அதற்கு இசைகிறோம் என்றோமா?

அ.வ.உ: மொழி வெறி கொண்டு மூடர் ஆகாதீர்.

மே.மா: எங்களுக்கு இல்லை, மொழி வெறி! எங்கள் மொழியை நீங்கள் கற்க வேண்டும் என்று கட்டாயப் படுத்துகிறோம்? அவர்கள் தானே அவர்கள் மொழியைக் கற்க வேண்டுவது கட்டாயம் என்கின்றனர். கட்டாயப் படுத்துகிறவன்தான் மொழி வெறியன். இந்தி படித்தால் நிலவிற்குப் போகலாமா? உழாமல் விளையுமா? நாடு முன்னேற நல்ல திட்டங்கள் இல்லை; தொழில் வளர்ச்சியில்லை; படித்தவனுக்கு வேலை இல்லை; பட்டினி கிடக்கிறான். இந்தி படித்தவனே சந்தியில் நிற்கிறான். மேலும் இந்தியைப் படித்துவிட்டு எங்கே போவது? படித்த மொழியே போதும். பிழைப்பிற்கு வழி சொல்லுங்கள்.

அ.ம.உ: அதிகாரம் சொல்லுவதை அப்படியே கேட்க வேண்டும்.

வே.மா: அது முடியாது என்பதால்தான் மக்கள் ஆட்சி வேண்டும் என்றோம்.

அ.வ.உ: மக்கள் விரும்புகிறார்கள். நீ கெடுக்கிறாய்.

வே.மா: நீங்கள் தாமே சொன்னீர்கள். மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் ஆட்சி மொழியென்று! மக்கள் விரும்பவில்லை என்பதால் தானே அப்படிச் சொன்னீர்கள்.

அ.வ.உ: மக்கள் விரும்பவில்லையென்று நீ எப்படிச் சொல்ல முடியும்?

வே.மா: வழக்குமன்றத்தைச் சுற்றி நிற்கும் மக்களே அதற்குச் சான்று.

மக்-தலை: இந்தி.

மக்கள்: ஒழிக!

வே.மா: கேட்கிறதா? மக்கள் விரும்புகிறார்களா? இல்லையா- யென்று.

அ.வ.உ: அவர்களை இப்படிக் கூற உணர்ச்சியை நீ ஊட்டி விட்டாய்.

வே.மா: அதைத் தடுத்துப் பாருங்களேன்.

அ.வ.உ: உன்னைத் தொலைத்து விட்டால் உணர்ச்சியும் ஒழியும்.

வே.மா: அடுத்தவன் வருவான்.

அ.வ.உ: அவனுக்கும் அதே நிலை.

வே.மா: உங்கள் நிலை என்ன ஆகும் சிறிது எண்ணிப் பார்க்கவும்.

அ.வ.உ: இந்தி அரசுதான் நடந்து கொண்டிருக்கிறது. அதை உணராமல் பேசக் கூடாது. இந்த அரசு இந்தியையும் காக்கும். அதற்குத் துணை நிற்கும் எங்களையும் காக்கும். உன்னை யார் காப்பது?

வே.மா: பைந்தமிழ் காக்கும். இந்தி ஆட்சி நடக்கும் வரைதான் உங்கள் பேச்சு இப்படி இருக்கும். இந்தியாட்சி மறையும் சூழ்நிலை தெரிகிறது. உங்கள் திமிரும் அடங்கிவிடும் விரைவில்.

அ.வ.உ: இந்தி இருக்கும் வரை இந்தியா இருக்கும். இந்தியா இருக்கும் வரை இந்திதான் ஆளும். இந்தி சட்டத்தில் பொதுமொழி. அதைத் தடுக்க என்ன குதி குதித்தாலும் நடக்காது.

வே.மா: சட்டத்தில் உள்ளவையெல்லாம் நடக்கவா செய்கிறது? தொடாமை (தீண்டாமை) பேசுதல் சட்டப்படி குற்றம். சிருங்கேரிச் சங்கராச்சாரியார், "தாழ்த்தப்பட்டவர்கள் வழலை (சோப்பு) போட்டுக் குளித்தாலும், தொடக்கூடாத- வர்களே," என்று வெளிப்படையாகக் கூறுகிறார். சட்டம் அவரை என்ன செய்து விட்டது? உடன் கட்டை ஏறுவது சட்டப்படி குற்றம். அச்செயல் நடந்து கொண்டிருக்கிறது. சில பண்டாரங்கள் வேதத்தின்படி நடப்பது சரியே என்று பேசுகின்றனர். சட்டம் என்ன செய்து விட்டது? சட்டத்- துக்கு எதிராக இருக்கும் வேதத்தை கிழித்தெறிந்திருந்தால் சட்டத்திற்கு மதிப்பு உண்டு. இந்தி மட்டும் சட்டத்தில் இருப்பதால் ஒன்றுஞ் செய்ய முடியாதாம். மக்கள் நினைத்- தால் உங்களை செக்கடி முண்டணுக்கி விடுவார்கள்.

அ.வ.உ: குட்டிச்சுவராய்ப் போய்விடப் போகிறீர்கள். இந்- தியை இனிமையென்று படியுங்கள்.

வே.மா: இந்தியைப் படித்தால் எங்கள் தோளில் ஏறிக் குதிரை ஓட்டுவீர்கள். தமிழைப் படிக்கவிடாமல் வாய்ப்பூட்டு போட்டுவிட்டு, இந்தியை எங்களைக் கொண்டே வளர்க்கச் சொல்வீர்கள். எங்களுக்குத் தெரியும் அதில் ஒன்றுமில்லை- யென்று. ஆணிவேர் இல்லாத மரம் விழுவது உறுதி. அதில் இனிமை சுவைக்க இலக்கியம் உண்டா? இலக்கணமா,

பெண்ணை ஆண் என்கிறது! உயிரற்ற செயற்கைப் பொருள்களையுங்கூட ஆண் பெண் என்று பிரிக்கிறது. இந்தியைப் படித்தால் உங்களை நாங்கள் அடிதொழ வேண்டியதுதான். எங்கள் குடி அடிமையாக இருந்ததில்லை. விடுதலையே எங்கள் குறிக்கோள்.

அ.வ.உ: உனக்கு உயிர் வேண்டாவா?

வே.மா: அதை என்றைக்கோ தமிழுக்குக் கொடுத்து விட்டேன்.

அ.வ.உ: வெடுக்கென்று பேசாதே, துடுக்கா! கடுகளவும் நினைக்கவில்லை நீ இந்தியாவில் இருப்பதை.

வே.ம: நான் இந்தியாவில் இல்லை. தமிழ் நாட்டில் இருக்கிறேன். இந்தியாவில் இருப்பதாய் நானேன் எண்ணப் போகிறேன்? தமிழனுக்குப் பிறந்தவன் நான். தமிழ் நாட்டில் இருக்கிறேன். என் பிறப்பில் ஐயம் இல்லை. உங்கள் பிறப்பில் ஐயம் இருக்கிறது. நீங்கள் பிறந்தது தமிழனுக்கா இந்தியனுக்கா?

அ.வ.உ: (சட்டென்று) அடக்கு வாயை! என்ன, வாய் நீள்கிறது? நீ நிற்பது வழக்குமன்றம்.

வே.மா: வழக்குமன்றமா இது? உள்ளதை இல்லையென்றும், இல்லையென்பதை உண்டு என்றும் வழக்குரைக்கும் வழக்காடு மன்றம்.

அ.வ.உ: தவற்றை ஒத்துக் கொண்டு மன்னிப்பு எழுதிக் கொடுத்து விட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள். வீண் வழக்காடாதே.

வே.மா: தமிழைக் கற்றவன் கோழையாக இருக்கமாட்டான். நான் தவறு எதுவும் செய்யவில்லை மன்னிப்பு வேண்ட.

அ.வ.உ: தமிழை உயர்த்தியும், இந்தியை இழித்தும் பேசியது குற்றம். ஒரு பெரும் நிலத்தைத் துண்டு போட எண்ணியது பெருங்குற்றம். இப்போது ஆளுவோரை அகற்றவேண்டும் என்கிறாயே இது மன்னிக்க முடியாத குற்றம். இதற்கு என்ன தண்டம் தெரியுமா?

வே.மா: தண்டத்தைப் பற்றி எண்ணினால் தமிழைக் காக்க முடியாது. தமிழினத்தை மீட்க விரையும் எனக்குத் தண்டம் என்ற தடை பூட்டும் திறப்பும் போல.

அ.வ.உ: இந்திய ஒற்றுமை இந்தியில் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டால் பிழைப்பாய்.

வே.மா: (மக்களைப் பார்த்து) மானமிகு தமிழ் நெஞ்சங்களே, நம்மொழியையும், நம்மையும் மதிக்கவில்லை. தவற்றைப் புரியும் தமிழ் மக்களே, நாம் தவறு செய்கிறோம். நம்மை அடிமைப்படுத்த வேண்டாம் என்கிறோம். சிறுத்தைகள் நாம். சீண்டிப் பார்க்கிறார்கள். பாய்ந்தால் புலி இல்லா விட்டால் பூனை என்று நினைக்கிறார்கள். நம்மை அடிமைகளாக்க எண்ணி, நம் குடுமியைப் பிடித்து ஆட்டுகிறார்கள்.

நம் தமிழுக்கு இடரா? பொறுத்துக் கொள்ள முடியாது. அவர்கள் திருந்தவில்லையென்றால் திருத்துங்கள். இருளில் வீழாமல் விழிப்புக் கொள்ளுங்கள். இவ்வளவு நாளும் அடிமை வாழ்வு போதும், இனி விடிவு வேண்டும்.

அ.வ.உ: (நடுவரைப் பார்த்து) மதிப்பு மிக்க நடுவர் அவர்களே! இவன் பேச்சு புரட்சியை ஊக்கும். மக்களை மானமுள்ளவர்களாக்கிவிடும். இவனை விட்டால் தமிழர்களைத் தட்டி எழுப்புவான். இந்திய ஒற்றுமை இவனால் அழியும். இந்தியைப் புறங்காண வைப்பான். இந்திக்கு முட்டுக் கொடுக்கும் நம் புகழைக் கெடுப்பான். இந்திய ஒற்றுமைக்கு இவன் சொல்லும் விளக்கமே வேறு, அதனால் போர் வருவது உறுதி. இந்திக்கு இலக்கணமும் இலக்கியமும் இல்லையாம். ஒரு பொது மொழிக்கு அவை ஏன்? நம்மை ஆளுவது இந்திய அரசு; இந்தியைப் படி யென்றால் படிக்கவேண்டியதுதானே. இந்தியால் தமிழ் கெடும் என்றால் போகட்டுமே. இந்தி படித்தால் வேலை கிடைக்குமே. அதைக் கெடுக்கும் இவனுக்குத் தூக்குத் தண்டத்தை நாக்குக் குழறாது கொடுக்க வேண்டுகிறேன்.

நடு: ஆம். ஆம். எத்தனையோ விளக்கங்களைக் கூறிவிட்டோம். பழம்பெரும் பாரத நாட்டைப் பிளக்கவேண்டும் என்கிறானே கரியன். நம் பிழைப்பில் மண்ணைப் போடப் பார்க்கிறான். வடக்கு வாழுதாம்; தெற்கு தேய்கிறதாம். ஆளுபவர்கள் வடக்கே இருந்தால் வாழத்தானே செய்வார்கள். தின்பவனைப் பார்த்துக் கொண்டே இருந்தால் வயிறு வலிக்கும் என்று நமக்கும் ஓர் எலும்பை வீசத்தானே செய்வான். அதைக் கெடுக்கப் பார்க்கிறானே இவன். அறிவு கெட்டவனே உனக்குத் தூக்கு. போய் சாவு.

காவ: (வேல்மாறனை இழுத்துக் கொண்டு செல்லுகின்றனர்.)

ஒருவன்: (பாடிக் கொண்டே போகிறான்.)

பாட்டு

அருள், அறம், மறஞ்சேர் அருந்தமி ழகமே!
இருளில் வீழ்ந்தனை என்றெழு வாயோ?
புகழ் செய் புலவோர் புரந்த செந் தமிழே!
இகழ்படச் சாம்பினை என்றலர் வாயோ?
பழிபடா வாழ்க்கைப் பைந்தமிழ் மகனே!
இழிபடக் கிடந்தனை என்றெழு வாயோ? (திரை)

(முடிவு)

---

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

# பாரதி வளர்த்தது பார்ப்பனீயமே!

தஞ்சை வெற்றிமணி

பாரதியின் 'சாதி எதிர்ப்பு', என்ற கவட நாடகத்தின் அடித்தளமாகப் பாரதியின் வருணாசிரமப் பித்து இருப்பதுப் போலவே, பாரதியின் 'உருசியப் புரட்சி'ப் புகழுரைக்குப் பின்னல் அவர் ஒரு 'பொதுவுடைமைப் பகைவராக' இருப்பது பலருக்குப் புரியவில்லை.

உருசியாவைப் போல் புரட்சி இம்மண்ணில் ஏன் வெடிக்கவில்லை என்பதனைப் பாரதி ஆராய்கிருர்.

''முதலாவது காரணம் இந்து ஜன சமூக அமைப்பில் ஐரோப்பாவில் இருப்பது போலவே அத்தனை அதிகமான தார தம்மியம் இல்லை. முதலாளி, தொழிலாளி, செல்வன், ஏழை இவர்களுக்கிடையே ஐரோப்பாவில் உள்ள பிரிவும், விரோதமும் நம் தேசத்தில் இல்லை. ஏழைகளை அங்குள்ள செல்வர் அவமதிப்பதுபோல நமது நாட்டுச் செல்வர் அவமதிப்பது கிடையாது. ஏழைகளுக்குத் தானம் கொடுப்பது என்ற வழக்கம் நமது தேசத்தில் இருக்குமளவு அந்த கண்டத்தில் கிடையாது....................கொலையாலும், கொள்ளையாலும், அன்பையும், சமத்துவத்தையும், ஸ்தாபிக்கப் போகிறேம் என்று சொல்வோர் தம்மைத் தாம் உணராத பரம மூடர்கள் என்று நான் கருதுகிறேன். ''இதற்கு நாம் என்ன செய்வோம்' கொலையாளிகளை அழிக்கக் கொலையைத்தானே கைக்கொள்ளும்படி நேருகிறது. அநியாயம் செய்வோரை அநியாயத்தால்தான் அடக்கும்படி நேரிடுகிறது.'' என்று ஸ்ரீமான் இலெனின் சொல்கிருர். இது முற்றிலும் தவருன கொள்கை. கொலை கொலையை வளர்க்குமேயொழிய அதை நீக்கவல்ல தாகாது. அநியாயம் அநியாயத்தை விருத்தி பண்ணுமேயொழிய குறைக்காது. பாபத்தை புண்ணியத்தாலேதான் வெல்லவேண்டும். பாபத்தை பாபத்தால் வெல்லுவோம் என்பது அறியாதவர் கொள்கை. அதர்மத்தை, தர்மத்தால் வெல்ல வேண்டும். தீமையை நன்மையாலே தான் வெல்ல முடியும். கொலையையும், கொள்ளையையும் அன்பினுலும், ஈகையாலும்தான் மாற்றமுடியும். இதுதான் கடைசிவரை கைக்கூடி வரக்கூடிய மருந்து, மற்றது போலி மருந்து. சிறிது காலத்திற்கு நோயை அடக்கிவைக்கும். பிறகு அந்நோய் முன்னைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக வலிமையுடையதாய் ஓங்கி விடும்............................தர்மத்தாலும், கருணையினுலும் எய்தப்படும் வெற்றியே நிலைபெற்று நிற்க வல்லதாகும். இதனை அறியாதார் உலக சரித்திரத்தையும், இயற்கையின் விதிகளையும் அறியாதார் ஆவர்.........................மேலும் ருஷ்யாவிலும்கூட இப்போது ஏற்பட்டிருக்கும் ''ஸோஷலிஸ்ட்'' ராஜ்யம் எக்காலம் நீடித்து நிற்கும் இயல்புடையதென்று கருத வழியில்லை.............. இலெனின் வழி சரியான வழியில்லை. முக்கியமாக நாம் இந்தியாவில் இருக்கிறேமாதலால் இந்தியாவின் ஸாத்யா ஸாத்யங்களைக்

Scanned with CamScanner

கருதியே நாம் யோசனை செய்யவேண்டும். முதலாவது இந்தியா: விலுள்ள நிலஸ்வான்களும், முதலாளிகளும் ஐரோப்பிய முதலாளிகள் நிலஸ்வான்களைப் போல் ஏழைகளின் விஷயத்தில் அத்தனை அவமதிப்பும் குரூர சித்தமும் பூண்டோரல்லர். இவர்களுடைய உடைமைகளைப் பிடுங்க வேண்டுமென்றால் நியாயமாகாது. அதற்கு நம் தேசத்திலுள்ள ஏழைகள் அதிகமாக விரும்பவும் மாட்டார்கள். —28, நவ, 1917 'செல்வம்' தலைப்பில் வெளியான கட்டுரைகள்.

'இலெனின் வழி தவறானது' என நேரடியாகவும், 'இலெனினைப் பரம மூடர்' என மறைமுகமாகவும், பொதுவுடைமைக் கொள்கையினை 'அறியாதவர் கொள்கை' 'போலி மருந்து' எனவும், பொதுவுடைமைக் கருத்தாளர்களை உலக வரலாற்றையும், இயற்கையின் நெறிகளையும் அறியாதவர்' எனவும் பாரதி சொன்ன பின்னாலும், ''இலெனினைப் போற்றுவதையே, அவரின் நூல்களைப் படிப்பதையே முழுநேரப் பணியாகக் கொண்ட மாணவர்கள்'' என்று மார் தட்டிக் கொள்ளும் செயகாந்தன்கள் பாரதியைப் புகழ்வது மாவீரர் இலெனினுக்குச் செய்யும், பொதுவுடைமை மெய்மமத்திற்குச் செய்யும் இரண்டகமில்லையா? இந்தப் பார்ப்பனீயச் சூழலில் மட்டுமே இலெனின் புகழ் பாட முடியும். புத்தருக்கு ஏற்பட்ட நிலை இலெனினுக்கும் நேர வேண்டும் என்பதில் இவர்கள் முனைப்பாய் இருக்கிறார்கள். ''இலெனின் வழி'-யைக் குழிதோண்டிப் புதைக்க அருமையான வழியே 'பாரதி வழி' என்பதனைப் பின் வரும் உரையாலும் பாரதி தெளிவு படுத்துகிறார்.

குமுகாய மாற்றத்திற்குப் பாரதி கூறும் வழி இதுதான்: ஊர் பணக்காரர்கள் ஊரைக்கூட்டி: ''பூர்வீககாலம் முதல் பரம்பரை பரம்பரையாக வழங்கி வரும் சொத்தை ரஷ்யா முதலிய தேசங்களில் நடப்பதுபோல் நீங்கள் பலாத்காரமாக எங்களைக்கொன்றும், சிறையிலிட்டும், எங்களிடமிருந்து பறித்துக்கொள்வது நியாயம் இல்லை'' (-28, நவ, 1917 ''செல்வம்'')(தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்—பாரதி) என்று கூறி ஏழைகளின் துயர் துடைக்க முன் வரவேண்டுமாம்.

''பொருளாளிகள் இடைவிடாத உழைப்பையும் அன்பையும், சமத்துவ நினைப்பையும், கைக்கொண்டால், உலகத்தில் அநியாயமாக உத்பாதங்கள் நேரிட்டு உலகமழியாமல் காப்பாற்ற முடியும்' (28, நவ, 1917 ''செல்வம்'').

''பாரதி வகுப்புப் (வர்க்கப்) போரைப் போற்றினான்.
வம்பர் வாழ்வைத் தூற்றினான்......''

சாதி ஒழிப்புக்கும், சமநிலை உணர்ச்சிப் பெருக்குக்கும் எப்படி எப்படியெல்லாம் வழி கூறலாமோ அப்படியப்படியெல்லாம் வழி கூறினான். இலெனினுடைய வேற்றுமையின்மைக் கொள்கையின் சிறப்பை ஏற்றுக்கொள்கிறான்; அது நம் நாட்டுக்குத் தீங்கு செய்-

யாது என்கிறான். முதலாளி ஜமீன்தார்களை 'தர்மகர்த்தாக்கள்' ஆக்கும் 'சமரசஞானம்' தலைகாட்டவில்லை''—சீவா. பாரதியின் பார்ப்பன—பணக்காரச் சார்பு உறுதியாகிவிடவில்லையா? 'சாதி எதிர்ப்பு' என்ற பாரதியின் முரண்பாடு, தெளிவற்ற சாதி எதிர்ப்பாளர்களுக்கு உண்மையற்ற கற்பனையான நிறைவு கொடுத்து உண்மையில் வருணாசிரமத்தைக் காத்தது போலவே, உருசியப் புரட்சியைப் புகழ்ந்து நமது 'காம்ரேடு'களை மதிமயங்கச் செய்து, மாவீரன் இலெனினையே 'பரமமூடர்' என அழைத்து, அதனையும் ''காம்ரேடு''* கண்டுகொள்ளாமல் இருக்கும் வண்ணம் அவர்களை 'போதை'யில் ஆழ்த்தியது பாரதியின் தனிப்பெருமையே.

அதுமட்டுமன்று,

''இரணியன் போலரசாண்டான் கொடுங்கோலன்
ஜாரெனும் பேரிசைந்த பாவி'' —பாரதி 'புதிய ரஷ்யா'

வரம்பெற்ற சிவபக்தனாகிய, இரணியனின் மகன் பிரகலாதன் வைணவ பக்தனாகித் தன் தந்தையை நோக்கி 'அரி தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்' என்று வெல்விளி (சவால்) விட, இரணியன் தூணை உதைக்க, விஷ்ணு சிம்மத் தலையுடன் தோன்றி இரணியனை அழித்தான். கிறித்துவப் பார்ப்பனர்களாம் பாதிரிகளின் துணையுடன் கொடுங்கோல் புரிந்தவன், சார் மன்னன். ஆக பாரதிக்கு இரணியனைப் பற்றியும் தெளிவில்லை; சார் மன்னனைப் பற்றியும் தெளியவில்லை.

குளக்கரையில் உட்கார்ந்திருந்த இரண்டு பைத்தியங்களில் முதல் பைத்தியம், ''இந்தக் குளம் தீப்பற்றினால் மீன்கள் என்ன ஆகும்?'' என்று கேட்டதாம். அதற்கு இரண்டாவது பைத்தியம் ''மீன்கள் கரையிலுள்ள மரத்தில் ஏறிக்கொள்ளும்'' என்றதாம். உடனே முதல் பைத்தியம், ''மீன்கள் என்ன காளை மாடுகளா மரத்தில் ஏற?'' என்றதாம். அதுபோல 'இரணியன் போல் அரசாண்டான் சார் மன்னன்' என்பதாகும். கஞ்சா அடிக்கும் வழக்கம் உள்ளவர் பாரதி. உயர் கஞ்சா போதையில் பாடிய பாடலோ? என்ன இழவோ?

'சுரண்டும் வகுப்பை (வர்க்கத்தை)ச் சார்ந்த ஒருவன், உண்மை நிலையினை—சுரண்டலை—உணரும்போது, அதனைத் தீர்க்க நடைபெற வேண்டிய சார்பிலா நடைமுறை மாற்றம் தன் நலனையோ, தான் சார்ந்துள்ள வகுப்பு (வர்க்க) நலனையோ தாக்குமென்றால் அவன் மனநோயாளி போன்று நடப்பான்', என்று Paulo Freire தனது 'Pedagogy of the oppressed' என்ற நூலில் சொல்கிறார். சாதிக் கொடுமையினை உணர்ந்த பாரதி, அதனை முற்றிலும் மாற்ற முனைந்தால், தாம் சார்ந்துள்ள பார்ப்பன சாதி தாக்கப்படும் என்பதால் 'மனநோயாளி'யாக நடந்து கொண்டார் என்பதனை அவருடைய வாழ்க்கையும், படைப்புகளும் உணர்த்துகின்றன. வியப்பு என்னவென்றால், இத்தகைய நடப்பு சுரண்டும் வகுப்புக்கு ஆதரவாக அமையும் என்கிறார் Paulo Freire. எனவே பாரதியின் தோற்ற முரண்பாடுகளான மனநோயாளித்தனமான

Scanned with CamScanner

படைப்புகள் பார்ப்பனீயத்தை வளர்க்கவே உதவின என்பதில் வியப்பில்லை.

பாரதி ஒரு தாழ்த்தப்பட்டவருக்குப் பூணூல் மாட்டி, அவரைப் பார்ப்பனராக்கியதும் இத்தகைய மனநோயாளித்தன நடத்தையால்தான். இதற்காக அவருக்கு 'நூற்றாண்டு விழா' எடுப்பதென்றால் பார்ப்பனீயத்தைக் காக்க ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்டவர்களுக்கு பூணூல் அணிவித்த இராமானுசருக்-கும் 'நூற்றாண்டு விழா' எடுக்கலாமே! முற்போக்காளர்கள் ஆர்.எசு.எசு. காரர்கள், பார்ப்பனர்கள், பார்ப்பன அடிவருடி-கள் பாரதியைப் போற்றுவதில் காரணம் உண்டு. பொது-வுடைமையா காம்ரேடுகள் பாரதியைப் புகழ்வதில் ஞாயம் உண்டோ?

## காலத்திற்கு முந்திய ஆர்.எசு.எசு. காரரே பாரதி!

''ஆரியக் குமாரர்களே! உங்களுக்கெல்லாம் பரிபூர்ண ஆரியத் தன்மையும் ஸர்வாபீஷ்டங்களும் சித்தியடைவதாக'' ப.73.பா.பு.2.

''பாரதி ஆரிய குமாரர்களே' என்று அழைத்தது பார்ப்பன நோக்கிலா என்று வியப்புறுவோருக்கு உடனே மனத்தில் தோன்றுவது 'பேராசைக்காரனடா பார்ப்பான்' என்ற பாடலாகும். அந்தப் பாட்டில் கூட பாரதி தம் பார்ப்பனப் பற்றை வெளிப்-படுத்த தவறவில்லை.

''பேராசைக்காரனடா பார்ப்பான் - ஆனால்
பெரியதுரை என்றவுடன் வேர்ப்பான்
யாரானும் கொடுமை இழப்பான் - துரை
இம்மென்றால் நாய் போல உழைப்பான்
முன்னாளில் அய்யரெல்லாம் வேதம் சொல்வார்
மூன்று மழை பெய்யுமடா மாதம்.''

முன்னாளில் பார்ப்பனக் கொடுமை எவ்வாறிருந்தது என்று விளக்கத் தேவையில்லை. ''மனுமுறைச் சோழன்'' என்பதைப் புகழுரையாகக் கொள்ளும் போதை இன்றளவும் தொடர்கிறதே. மனுமுறைப்படி பார்ப்பானுக்கு ஆதரவாக ஆட்சிபுரிந்த இரண்-டகர்களே மூவேந்தர்கள். 'தொட்டால் தீட்டு', 'பார்ப்பனச் சேரியில் நடந்தால் தீட்டு' போன்றவை முணுமுணுப்பின்றி விரும்பிக் கடைபிடித்த வெட்கக் கேடான காலம். அந்நாளைய 'பார்ப்பான்' பாரதிக்கு 'அய்யரே'. தன்மதிப்பு உணர்ச்சி தோன்றி மனுமுறை நொறுங்கத் தொடங்கிப், பார்ப்பான் வெள்-ளைக் காரனிடம் விலை போனது கண்டு துடித்தவன்தான், பாரதி. எனவேதான் துணிவாகப் ''பார்ப்பானை அய்யரென்றக் காலமும் போச்சே'' என்று பாடினான். முன்னாளைப் பார்ப்பான் பாரதிக்கு என்றும் ''அய்யரே'' என்பதை முன்னால் சொன்ன பாடல் உறுதிப்படுத்துகிறது. இதே காரணத்தால்தான் - இந்து மதத்தின் சொற்படி ஒழுகாததால்தான் மக்கள் சீர்கெட்டனர் - என்று கயமைத்தனமாகப் பின்வரும் பாடலைப் பாடினார்.

''சதுர் வேதங்கள் மெய்யான சாஸ்திரங்கள்
எனுமிவற்றுல் இவ்வுண்மை விளங்க
கூறும் துப்பான மதத்தினையே ஹிந்து
மதமெனப் புவியோர் சொல்லுவாரே!';
''அருமையுறு பொருள்களெல்லாம் மிக அரிதாய்
தனைச்சாரும் அன்பர்க்கிங்கு
பெருமையுறு வாழ்வளிக்கும் நற்றுணையாம்
ஹிந்து மதப் பெற்றி தன்னை
கருதியதன் சொற்படியிங் கொழுகாத
மக்களெல்லாம் கவலை யென்னும்
ஒரு நரகக் குழியதனில் வீழ்ந்து தவித்
தழிகின்றுர் ஒய்வி லாமே''
—ஹிந்து மாதாபிமான சங்கத்தின் மீது வாழ்த்துப்பா:

வெறும் வேதம் என்று சொன்னுல் வேறுபொருள் சொல்லி 'பாரதியின் இந்து மதம் வேறு என்று முடிக்க சீவாக்கள் காத்துக் கிடப்பதால், குழப்பத்திற்கு இடமின்றிச் 'சதுர் வேதங்கள் மெய்யான சாத்திரங்கள் எனுமிவற்றுள் இவ்வுண்மை விளங்கக் கூறும் துப்பான மதத்தினையே' பாரதி இந்து மதமென விளக்குகிறுர். தமிழகத்தில் இனி ஒவ்வோர் ஆர்.எசு.எசு. கூட்டத் தொடக்கத்திலும் மேற்சொன்ன பாடல் பாடப் பெற்றுலும் வியப்பில்லை;

''வீரிய வடிவம்—என்ன
வீரிய வடிவம்
ஆரியன் நெஞ்சம்
அயர்ந்ததென் விந்தை''

என்று 'ஆலய தரிசன'த்தில் பெருமை பேசிய பாரதி 'தமிழ்த்தாய்' பாடல் கூட

''ஆதி சிவன் பெற்றுவிட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்
... ... ... ... ... ... ... ... ... ...
ஆன்ற மொழிகளினுள்ளே—உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்.''

இங்கு 'ஆரியம் என்பது சமக்கிருதமே. தமிழுக்கு இலக்கண நூல் படைத்த அகத்தியன் கூட 'ஆரிய மைந்தனுகப் பாரதிக்குப் பட்டதும், ஆரியத்தைவிட மிக மூத்த, முதிர்ந்த தமிழனை 'ஆரியத்திற்கு நிகரென' அழைத்ததும், பாரதியின் பார்ப்பனப் பற்று 'வெறி' என்ற நிலையை அடைந்ததால்தான். எனவேதான் ''யாமறிந்த புலவரிலே கம்பனை''—அவன்தான் தன் பாத்திரத்தால் பார்ப்பன நஞ்சைத் திறம்பட தமிழில் கலந்தவன் ஆதலால்—முதலில் வைத்தான் பாரதி! கண்ணன் என் காதலியில் கூட ''ஆரிய முன்னெறிகள் மேன்மையென்கிருய்'' என்று முன்னெறிகளைப் போற்றுகிறுர் பாரதி.

இதற்கு மேலும் பாரதியின் பார்ப்பனப் பற்றுமீது ஐயம் எழுந்-தால் அதனை முறிக்கும் வண்ணம் பின்வரும் சான்று அமைகிறது.

''ஆரியராகிய நாம் ஏன் வீழ்ச்சி பெற்றோம்? நமது தர்மங்களை இழந்ததினால்—அறிவை அபிவிருத்திச் செய்தல், பல்லாயிர வகைப் பட்ட சாஸ்திரங்கள் அதாவது அறிவு நூல்களைப் பயிற்சி செய்து வளர்த்தல், தர்மத்தை அஞ்சாது போதனை செய்தல் முதலிய பிராமண தர்மங்களையும், வியாபாரங்கள், கைத்-தொழில்கள் என்ற வைசிய சூத்திர தர்மங்களையும் நாம் சிதைய இடங்கொடுத்து விட்டோம்.''

வர்ணாசிரம விஷயங்களும், அனாவசிய சண்டைகளும் வளர இடங்கொடுத்து முக்கிய தர்மங்களை மறந்து விட்டோம்—இதுவே நமது வீழ்ச்சிக்குக் காரணம்'' —பக் 78, பா. பு. 3.

இன்றைய ஆர். எசு. எசு. கூட்டங்களில் வெளிப்படையாக முழங்கக் கூடிய அளவுக்குப் பாரதியின் படைப்புகள் உள என்ப-தற்கு முன்னமேயே சில அடிப்படைகள் காட்டப்பட்டன. பாரதியை அவர் வாழ்ந்த காலத்தில் பார்ப்பனர்கள் தூற்றினார்-கள். உண்மைதான்! பார்ப்பனர்களுக்கு முன்னறிவு கிடையாது என்பதற்கான பல சான்றுகளில் இதுவும் ஒன்று. பாரதி 'மீசை' வைத்துப் 'புரட்சி' செய்தார். மாறு நிலைத்தன்மை காரணமாகப் பார்ப்பனீயம் குமுகாய மாற்றங்களால் நசிந்து விடக் கூடாது என்பதை உணர்ந்து அன்றே அதற்கான வழி வகுத்தவர் பாரதி. காலத்திற்கு முந்திய ஆர். எசு. எசு. காரரே பாரதி. முன்னறி-வில்லாத காரணத்தால் பார்ப்பனர்கள் வாழ்ந்த காலத்தில் அவரைத் தூற்றினார்கள். அதே பார்ப்பனர்கள்தாம் இன்று பாரதியைப் போற்றுகிறார்கள். பாரதிக்கு நூற்றாண்டு விழா எடுக்கத் தலைக்கீழாய் நிற்கிறார்கள். இன்று பாரதியைப் போற்றும் பார்ப்பனர்கள் சூத்திரன் 'அர்ச்சகராவதை' வரவேற்கிறார்களா? தமிழில் வழிபடுவதற்கு ஆதரவு தருகிறார்களா? காஞ்சி சங்கர மடத் தலைமை, பிறப்பின் அடிப்படையிலின்றித் 'தகுதி திறமை' யிலே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கிறார்-களா? மாறாக, பாரதியைப் போன்று எண்ணற்ற பார்ப்பனர்கள் 'மீசை' வைத்து விட்டார்கள். அவர்களின் 'சிண்டு'கள் ஒழு-ங்கைக்கு (கிராப்பிற்கு) வழி விட்டு விட்டன. தாழ்த்தப்பட்டோர் 'கோயில் நுழைவை' எதிர்க்கவில்லை. 'இட ஒதுக்கீட்'டை ஒழிக்க மற்றவற்றைப் பாதுகாத்துக் கொண்டே 'சாதிஒழிக' என்றும் சிலர் முணுமுணுக்கிறார்கள்.

''பாரதி ஆர். எசு. எசு. காரரா?'' என்ன பிதற்றல்? என்-போருக்குப் பின்வரும் சான்றுகள் தெளிவை ஏற்படுத்தும்;

''கிராமத்திற்கு கஷ்டம் வந்தால் குலத்தை விட்டுவிடு'' என்று சொல்லியிருக்கவில்லையா? இப்பொழுது நம்முடைய தேசத்திலிருக்கும் தாழ்ந்த ஜாதியர்களையெல்லாம் கிறிஸ்துவர்-கள் தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். இதுதான் நம்முடைய குடியைக் கெடுக்கும் கோடாலியாயிருக்கும்''

(பக் 94, பா. பு. 2)

Scanned with CamScanner

தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தம்
திக்கை வணங்கும் துளுக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் ஏசு மதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்,''

என்ற பாடலில் 'சாதிகள் இல்லையடி பாப்பா' பாணியில் மதச் சண்டைகளை எதிர்ப்பதில் உள்ள பாரதியின் நாணயம் முன்னால் சொன்ன மேற்கோள் மூலம் தெளிவாகிறது. இல்லையென்போருக்கும் உறுதியாக தெளிவு ஏற்படுத்த பாரதி சொல்கிறார்.

''பதினாயிரக் கணக்கான நமது சகோதரர்களையெல்லாம் நாம் கோவிலுக்குள் வராமல் தடுத்து வைத்தால் அவர்கள் கிறிஸ்துவம், மகமதியம் முதலிய அந்நிய மதங்களில் சேர்ந்து விடுவார்கள். அதிக விரோதங்களுக்கு இடம் கொடாமல் சமாதானமாகவே எல்லா ஹிந்துக்களும் நமது கோவில்களுக்குள் பிரவேசிக்கலாம்' என்ற நல்ல வழக்கத்தை அனுஷ்டானத்துக்கு கொண்டு வரும்படியாக ஆரிய தேசத்திலேயும், நமது சனாதன வைதிக தர்மத்திலேயும் பற்றுள்ள எனது தேச சகோதரர்களெல்லோரையும் வணக்கத்துடன் பிரார்த்திக் கொள்ளுகிறேன்'' (பக்64, பா பு.2) ''பாருக்குள்ளே தெய்வம் ஒன்று' எனில் யார் எந்த மதத்திலிருந்தாலும் பாரதிக்கு என்ன கவலை? மாந்த சமநிலையின் அடிப்படையில் 'ஆதி திராவிடர்களின் கோயில் நுழைவைக் கோரியிருந்தால் 'கருவறையையும் சூத்திரனுக்குத் திறக்கச்சொல்லி' கோரியிருப்பார். மாறாக ஆர்.எசு.எசு. நோக்கில் கிறித்துவ, மகமதிய மதங்களில் பலர் சேர்வதைத் தடுக்கவே, 'கோயில் நுழைவு அனுமதியை' ஆதி திராவிடர்களுக்குக் கோரியுள்ளார்.

கிறித்துவ மகமதிய மதங்களைச் சார்ந்த தமிழ்ப் பண்டிதர்களும் பாரதியைப் போற்றுகிறார்கள். பாரதியையும், கம்பனையும் புகழ்ந்து 'தன் பார்ப்பன அடி வருடி'த்தனத்தை மெய்ப்பிக்கா விட்டால், 'தமிழ்ப்பண்டிதர் அந்தஸ்து' கிடைக்குமா?

'இதில் வேறொரு விஷயம் யாதெனில் மனித ஜாதிக்குள்ளே கூட மற்றெல்லா வகுப்பினரைக் காட்டிலும், ஹிந்துக்கள் அதிக இகழ்ச்சியடைந்து அதிகபரிதாபகரமான ஸ்திதியிலிருக்கிறார்கள்.

—28, நவ. 1917 ''செல்வம்''

இன்றைக்கு ஆர். எசு. எசு. காரர்கள் சொல்வதை 1917—இலேயே சொல்லிக் 'காலத்துக்கு முந்திய ஆர்.எசு.எசு. காரர் என்று தம்மை உறுதிப் படுத்துகிறார் பாரதி. இதே அடிப்படையில்தான் ''நம்முடைய தேசத்து சனாதன தர்மத்தைக் காப்போர் ஒருவரும் இல்லை'' (—பக் 94. பா. பு. 2,) என்றும் அன்றே உருகினார், பாரதி.

இத்துடன் திரு: மோகன்தாசு கரம் சந்த் காந்தி கொலை வழக்கில் கோட்சே என்ற பார்ப்பனன் கொடுத்த வாக்கு மூலத்தை (Life and Death of Mahatma Gandhi by Robert Pyne என்ற பொத்தகத்தில் இருக்கிறது) ஒப்பிட்டால், பாரதிக்கும், கோட்சேக்கும் உள்ள அரிய ஒற்றுமை புலப்படும்.

'சனாதன வைதிக தர்ம'த்தில் பாரதியைப் போன்றே கோட்சேக்கும் பற்று இருந்தது. 'அதனைக் காப்போர் யாரும் இல்லையே' என்று உருகியதிலும் இருவருக்கும் ஒற்றுமை இருந்தது. சாதிக் கொடுமைகளுக்கு முதலைக் கண்ணீர் வடித்து, கோட்சே தானே முன்னின்று நடத்திய 'சமபந்தி போசனம்' போன்ற 'முற்போக்கி'லும் இருவருக்கும் ஒற்றுமை இருந்தது. ஆனால் கோட்சேயைத் தூற்றுபவர்கள் கூட பாரதியை போற்றுகிறார்கள். ஆனால் பாரதியோ கோட்சேயைவிட ஒருபடி மேலே சென்று, உருசியப் புரட்சியைப் புகழ்வது போல், ஆனால் உண்மையில் இகழ்ந்து, தன் பொதுவுடைமைப் பகைமைப் பண்பு புலப்படாமல் பொதுவுடைமைக் கூடாரங்களைக் குழப்பிய பெருமை (?) பாரதிக்கு உண்டு. "தெளிவாகத் தெரிந்த எதிரி, தன்னை மறைத்து நம்மை ஏமாற்றப் பார்க்கும் எதிரியை விட மேலானவன்" என்ற நோக்கில் கோட்சே பாரதியை விட மேலானவரே!

## முடிவுரை :

பாரதியின் பார்ப்பனீய — பணக்காரச் சார்பு தெளிவாக்கப் பட்டுவிட்டது. பாரதியைப் பொறுத்தமட்டில், 'சாதி எதிர்ப்பு' ,பார்ப்பன எதிர்ப்பு' முற்போக்கு' போன்றவை தமது பார்ப்பன—பணக்காரச் சார்பினை மறைத்து உலகை ஏமாற்றிப் பயன் படுத்திய கருவிகள். இதனால் குமுகாய உணர்வுள்ள ஆனால் பகுத்தறிவு, தெளிவற்றோரை 'இராமாயண அபிமானி' களாக்கி, அவர்கள், கவனம் மறந்தும் பார்ப்பனீயத்தின் மூலத்தின் பக்கம் திரும்பாமல் பார்த்துக் கொண்டவர் பாரதி. தலை கீழ்க் குமுகாய மாற்றம் தம் பார்ப்பனச் சாதியினைத் தாக்கும் என்பதையுணர்ந்து, (இறப்பில் கூட) 'மன நோயாளி'த் தனமான வாழ்க்கை வாழ்ந்த 'மன நோயாளி'த் தனமான படைப்புகளின் மூல முதல்வரே பாரதி, இதனால் பயன் பெற்றது, பெறுவது பார்ப்பன — பணக்கார ஆற்றலே.

இதில் மனவருத்தம் என்னவென்றால் இன்று உருசியாவில் 'இராமாயண' நாடகங்கள் நடைபெறுவதுதான். இங்கு உருசியத் பண்பாட்டினை அறிமுகப்படுத்துகிறோம் என்று கூறி, சார் மன்னன் காலத்தில் அவன் ஆட்சியைப் புகழ்ந்த கதைகளை இம்மண்ணில் அரங்கேற்றினால். உருசியப் பொதுவுடைமைக் கருத்தாளர்கள் .நம்மை வல்லரசியத்தின் (ஏகாதிபத்திய) கைக்கூலிகள்' என்று திட்டமாட்டார்களா? மனுதர்மத்தை ஞாயப்படுத்தும், குமுகாயச் சுரண்டலை, பொருளியல் சுரண்டலை ஏற்றுக் கொண்ட .இராமாயணத்தை' உருசியாவில் நடத்தினால், அவர்களை வல்லரசியக்காரர்கள் என்று அழைப்பது தவறா? ஏற்கனவே

திரு. டி. நாகிரெட்டி (முன்னாள் குடியரசு தலைவரின் நெருங்கிய உறவினர்) தமது India Mortgaged என்ற நூலில் 'அமெரிக்காவும், உருசியாவும் இந்நாட்டைப் போட்டி போட்டுக் கொண்டு சுரண்டுகிறார்கள். அமெரிக்க வல்லரசியத்தை விட உருசிய வல்லரசியமே அதிகம் சுரண்டுகிறது' என்று புள்ளி விளத்தங்களுடன் விளக்குகிறார். இது சரியா, தவறா என்பதன்று இங்குள்ள சிக்கல். இந்நாட்டுப் பார்ப்பனீயத்தில் மூழ்கி இருந்தால்தான் வல்லரசியச்(ஏகாதியத்திய) சுரண்டலுக்கு எதிர்ப்புணர்ச்சி இல்லாத நாடாக இருக்க முடியும். எனவே 'உருசியாவில் இராமாயணம்' என்றவாறு இந்நாட்டு மக்களைப் பார்ப்பனீய போதையில் அழுத்தி வைக்க, உருசியா துணை போகுமானால், அது வல்லரசி (ஏகாதிபத்தி)யத்தின் வேலையே ஆகும் என்பதில் அய்யமில்லை. உருசியாவில் 'இராமாயணம்' போன்றவை இந்நாட்டுப் பார்பனீய எதிர்ப்பு முயற்சிகளுக்குப் பெருந்தடையாவே இருக்கின்றன. உருசியாவிற்கு இராமாயணம் போன்றவை ஏற்றுமதியாவது உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும். இதற்கு இந்தோ சோவியத்து நட்புறவுக்கழகம் பயன் படுமா என்பது அய்யமே. ஏனெனில் அவை ஏற்கனவே பார்ப்பனர் வசம் சிக்கி விட்டதாக தெரிகிறது. முறையான நடவடிக்கைகள் மூலம் நமக்குள்ள வருத்தத்தை உருசிய அரசிற்கு உடனே தெரிவித்தாக வேண்டும். உருசியாவில் இராமாயணம் போன்றவற்றைத் தடுக்க முடியாவிட்டால் அமெரிக்க வல்லரசி(ஏகாபத்தி)யத்தைப் போன்றதே 'உருசிய வல்லரசி(ஏகாதிபத்தி) யமும் என்பது உறுதியாகிவிடும்.

இந்நாட்டு 'காம்ரேடு'களின் முணுமுணுப்பின்றி 'இராமாயணம்' உருசியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாக வழி செய்தது பாரதி போதையே! மாவீரர் இலெனின் 'சமாதி விஜயம்' செயகாந்தன்களுக்குக் 'கருப்பக்கிருக பிரவேச' மானதற்குக் காரணம் பாரதி போதையே! மாவீரர் இலெனினையே 'பரம மூடர்' என்ற பார்ப்பன மூடர் பாரதியைக் 'குரு' வாக ஏற்றுக் கொண்டு 'இலெனின் புகழ்' பாடும் மனநோயாளித்தனங்களுக்குக் காரணம் பாரதி போதையே! காரல் மார்கிசின் இந்தியாவைப் பற்றிய கருத்துகளை மனத்தளவில் பார்ப்பனீய நோக்கில் மறுத்துக் கொண்டே பொதுவுடைமை பேசும் செயகாந்தன்களின் மனநோயாளித் தனங்களுக்குக் காரணம் பாரதி போதையே!

பாரதி நூற்றாண்டு விழாக்களில் தம்மை இணைத்துக் கொள்வோர் இப்பாரதி போதைக்கு ஆளானவர்களே. அவ்விழாக்களில் அவர்கள் காட்டும் ஆர்வம் அப்போதையின் வலுவை அறியும் அளவு கோலாகவே அமையும்.

மற்ற நாடுகளில் பிரிவுகள் (அல்)வகுப்புகள் (வர்க்கங்கள்) மட்டும்தாம் உண்டு. இங்கு வருணமும் உண்டு. சாதி ஒருங்கிணை விசை வகுப்பு(வர்க்க) ஒருங்கிணை விசையினை விட வலுவாகவே இருக்கிறது. எனவே சாதி ஒருங்கிணை விசையினை வலுவிழக்கச் செய்து, வர்க்க ஒருங்கிணை விசையினை வலுப்பெறச்-

Scanned with CamScanner

செய்து, வகுப்பு (வர்க்க)த் தெளிவாக்கம் ஏற்படுத்த முனைபவர்கள் எதிர்த்துப் போரிட வேண்டிய முக்கிய போதைகளுள் பாரதி போதையும் ஒன்று என்பதனைச் சுட்டிக் காட்டும் நோக்கே இந்நூலின் இலக்கு.

இம்மண்ணில் பொது உரிமையுள்ள பொதுவுடைமைக் குமுகாயம் படைக்கும் புரட்சி நோக்கிப் பல அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. பொதுத் தடைகளை அகற்றிய பின்னர்தான் 'எவர் வழி சரியானது' என்ற சிக்கலுக்கு வேலை ஏற்படும். பொதுத் தடைகளை அகற்றுமுன்னர் அச்சிக்கல் பற்றிய முயற்சி வீணான ஆற்றலில்தான் முடியும். சீனத் தலைவர் மாவோ தேவைப்பட்ட காலத்தில் சியாங்-கே-சேக்குடன் உறவு கொண்டு பொது எதிரியை வீழ்த்திய பின், உரிய நேரத்தில் சியாங்-கே-சேக்கையும் வென்றதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே இன்றைய நாள் பொது உரிமைப் பொதுவுடைமை மற்றும் பொது உரிமை பற்றித் தெளிவற்ற பொதுவுடைமை அமைப்புகள் தங்களுக்குள் எதிரி மனப்பாங்குகள் இருந்தாலும், அம் மனப்பாங்குகளுக்கு வேலை கொடுக்க வேண்டிய வேளை பொதுத் தடைகளை அகற்றிய பின்னர்தான் என்பதை உணர வேண்டும். பொது உரிமைப் பொதுவுடைமைப் புரட்சிக்கான சூழலை வலுவிழக்கப் பண்ணும் பார்ப்பனீயத்தை வென்று, சூழல் வலுவிழந்து புரட்சி வெடிக்கும் நிலை வரும் போது, மேற்சொன்ன அமைப்புகளின் வேற்றுமைகளுக்கு வேலை ஏற்பட்டுப் பின் தெளிவு பிறக்கும். அந்நிலை ஊரும் வரை அவ்வேற்றுமைகளுக்கு வேலை கொடுக்க முனைவது வீணான வேலை என்பதை உணர வேண்டும்.

இன்று 'பார்ப்பனீயம்' முகாமையான பொதுத்தடை என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. ''பார்ப்பனீய எதிர்ப்பாளர்கள் என்று சொல்லிக் கொண்டு 'பாரதி போதை'யில் சிக்கிச் சீரழியும் 'காம்ரேடு'களைக் காப்பாற்றும் முயற்சியே இந்நூல்.

பாரதியின் படைப்புகளைப் புரட்டினால் இன்னும் நிறைய அடிப்படைகள் கிடைக்கும்; இன்னும் ஆழமாக ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவர வேண்டும். அதன் மூலம் பாரதியைப் புகழ்பவன் பார்ப்பனீயப் பணக்கார ஆற்றலின் தொண்டன் என்பதை உலகம் தெளிவாக உணர வேண்டும். அதனால் மறந்தும் இப்போதைக்குள் 'புதியவர்கள்' ஆளாகாமல் காப்பாற்ற முடியும். மிகக் கொடிய சிக்கலான பார்ப்பனீயத்தின் ஒரு பரிமாணம்தான் பாரதி போதை. பார்ப்பனீயத்தை எதிர்ப்போர் பாரதியிடம் ஒப்புரவு (சமரசம்) செய்து கொள்வது 'காலில் விழுந்த குற்றவாளி இன்னும் போரிட்டுக் கொண்டிருக்கிறேன்' என்று உளறுவதைப் போன்றதாகும். பாரதி போதையை வென்று பார்ப்பனீயத்தினின்று பாட்டாளிகளை மீட்டுப் புரட்சி நோக்கி முன்னேறுவோம்.

(முற்றும்)

Scanned with CamScanner

வியத்தற்குரியது. என் அழுகையை என்னால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. அடையாளந் தெரியாமலயே ஓர் அரிமா அடங்கி விட்டதே! அன்றும் இன்றும் என்றும் தங்கள் மாணவன்,

—இளஞ்சித்திரன், சென்னை-48.

ஒ : 1376 : பேரன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஐயா, வணக்கம். தென்மொழி சுவடி 25, ஓலை 1 கண்டேன். அதில் பா உரையும், தலைமையுரையும் கண்டேன், கண்ணீரும் சிந்தினேன். அப்பாத்துரையார் ஆற்றிய அரும்பெரும் தமிழ்த் தொண்டை நன்கு அறிவேன். ஆனால் அவர்கள் இயற்றிய அரும்பெரும் நூல்களால் அவர்கள் இழந்த பொருளியல் சீர்குலைவைத் தங்கள் உரையால்தான் அறிந்தேன்.

தமிழும், இனமும் நாடும் இழிந்த தாழ்ந்த நிலையில் இருப்பதற்கு அவர்களை நன்கு பேணாமையே கரணியமாம். இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நம் நாடு இத் தாழ்ந்த நிலையிலிருக்கப் போகிறதோ அறியோம். தமிழை நன்கு பேணாதவரை இவ்வினத்திற்கு விடிவு கிடையாது. உங்களன்பின்.

—மு. தமிழ்நெஞ்சன், துறையூர்,

ஒ : 1377 : பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கும், குடும்பத்தாருக்கும், வணக்கங்கள். இவ்விடத்திற்கு வந்து ஐந்து மாதங்களின் பின் தங்களோடு தொடர்பு கொள்கையிட்டு மன்னிப்பீர்கள் என நம்புகிறேன். தாங்கள் முதுமையிலும்-இளைஞனாக நின்று தமிழ்த்தொண்டு செய்து வருவதை - என்னால் மறக்க முடியவில்லை. தங்கள் முயற்சிகள் வெற்றி பெறவும் - தமிழினத்தின் விடிவுக்கு அவை வடிகாலாய் அமையவும் - என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்மைக் காலங்களில் இலங்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அறிந்திருப்பீர்கள். இவையெல்லாம் - ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டவைதாம். வருங்காலம் எப்படி அமையுமோ தெரியவில்லை.! அன்பு

— மாதவன். பிரான்சு.

ஒ : 1378 : பெருந்தகை பெருஞ்சித்திரனார் அவர்கட்கு. ஐயா, இணையற்ற இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளின் நின்று கடந்த காலத்தினைத் திரும்பிப் பார்த்தால், தமிழ்மொழியை, தமிழ் மண்ணை, தமிழ் இனத்தை விரும்பிய தலையாய தமிழ்த்தலைவர்கள் பலரும் மறைந்து விட்டனர்.

எஞ்சி நிற்பாரில் அரசியல்காரர்களைக் கழித்தால் நீவீர் தனியாக நிற்பதை உணர முடிகின்றது. ஆயின் தங்களின் தனித்தன்மையும், தணியாத தமிழ்ப்பற்றும், ஐயமின்றித் தங்களை ஐந்துக்கோடித் தமிழரையும்விட உயர்ந்த நிலையில் நிறுத்தி உள்ளது.

தம் நிழலையே திரும்பிப் பார்க்காத தமிழர்கள், தலையினை உயர்த்திப் பார்த்து உங்கள் உயர்ந்த எண்ணங்களை தெரிந்து உணர்ந்து,ஏற்றுப் பின் தங்களைத்தொடர்ந்து உள்ளத்தால் தாங்களும் உயர்ந்து, தமிழ்கூறும் இந்நல்லுகத்தையும் உயர்த்திடுவர் என எதிர்பார்ப்பதும் உள்ளம் கலங்கியவனிடம் சித்துவிளையாட்டை எதிர்ப்பார்ப்பதும் ஒன்றே!

"சித்தம் கலங்கி இருப்பினும்; செந்தமிழர் அனைவரும் என் சிந்தை கவர்ந்த பிள்ளைகள்; செத்துவிடாமல் அவர்கள் இருக்கின்றனரே அதுவே எனக்குப் போதும்; அவர்களை சீறும் சிறுத்தைகளாக மாற்றாமல் நான் உறங்கேன்" என உங்களது உயர்ந்த உள்ளம் சூளுரைப்பதை நான் உணராமல் இல்லை. ஆயின், காமக் களியாட்டங்களையும், சாதிச் சண்டைகளையும் சமயப் பொய்களையும், ஆடையற்ற அணங்குகளின் வரை படங்களையும் அச்சேற்றி, விற்று வணிகம் செய்யும் 'குமுதங்'கள் ஒருபுறம்,

ஆந்திரச் சதைகளையும், கேரளச் சதைகளையும் கர்நாடகச் சதைகளையும் ஒளிப்படமாக்கித் தமிழகத்தின் மூலை முடுக்கிலெல்லாம் வெள்ளைத் திரைகளிலே விற்று வணிகம் செய்யும் திரைப்பட முதலைகள் மறுபுறம்.

இத்தனைக் கடும்புயலுக்கு இடையே 'தென்மொழி', என்னும் கைவிளக்கினை உள்ளத்திலே ஏற்றி வைத்து, இரு கைகளாலும் காத்து நிற்கும் நீர் ஒரு தனிப் பிறவி என்பதில் ஐயமில்லை.

அரசியல் கணிகையரின் கண்ணசைவுகளைக் கால் துகளாக எண்ணினீர்! உருவாக்கிவிட்ட பிள்ளைகள் ஊர்மேயப் போன பின்னும், அவர்களின் உள்ளங்களில் உங்களது உருவம் உருகிப் போன பின்னும், அந்தத் திரு உருவம் இருந்த இடத்தில் பெருங் கொழுப்பு உருவாகிய பின்னும், காலம் கற்றுத் தந்த கல்வியினை ஏற்றுக் கொள்ளாமல் தமிழ் இனமானத்திற்காக ஓய்வின்றி உழைக்கின்றீரே! ஐயா, நீர் ஒரு தனிப்பிறவி என்பதில் ஐயமில்லை. ஆயின்,

தந்தை பெரியார் சொன்னார்,-'காசில்லாதவர் எத்தனை உயர்ந்த குமுகாயப் பணிசெய்யினும் ''பொப்பிலி ராசாவைப் போல்'' கடைசியில் காணாமல் போய்விடுவர்' என்றார். (நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார் சொற் பொருள் சோர்வு படும்— என்னும் திருக்குறளை எண்ணுக. —ஆசிரியர்'') மார்க்சு சொன்னார், ''முடிவுதான் பாதையை உறுதிப்படுத்துகிறது'' என்று. 'துமுக்கி (துப்பாய்க்கி) முனையில் தான் சமநிலை பிறக்கிறது' என்றார் மாவோ. ஆயின், நீவிர், ''அறிவுப் பணியின் மூலம் தமிழனையும், தமிழையும் ,தமிழ் நாட்டையும் உயர்த்திட முடியும்'' என இன்னும் நம்புகின்றீர். ஐயா, என்னை மன்னித்திடுங்கள்.

களை எடுக்க கத்திகள் தேவை. உமது கைவிளக்கிற்கோ 'காசு' என்ற எண்ணெய் தேவை. அந்த எண்ணெயை, தந்து உதவிட இந்த நாட்டிலே எந்தப் பயலும் அணியமாய் இல்லை. கொள்கை (இலட்சியங்)களை மறந்து இலக்கங்களில் புரண்டு கொண்டிருக்கும் உம் பழைய மாணவர்களே அணியமாய் இல்லை என்பதே உண்மை.

தோளுக்கு மேல் வளர்ந்துவிட்ட இந்த இனத்திற்கு, இலக்கியப் பால் கொடுப்பதை நிறுத்திவிட்டு, வாள் வடித்துக் கொடுக்கத் தொடங்குவீர். உமது கைவிளக்கில் இருந்து கனல் பிறக்கட்டும்! அந்த நெருப்பு வித்து நல் நெஞ்சங்களில் வேர் பிடித்து வளரட்டும்!

ஐயா, தென்மொழியின் விலையை மாற்றி அமையுங்கள். நல்லவர்களுக்கு இரண்டு உருபா, நம்மவர்களுக்கு பத்து உருபா, என்று! இதை நீவிர் செய்யாமல் போனால், கண்சிமிட்டும் இக்கைவிளக்கும் காணாமல் போயே விடும்! நீரும், கடைவிரித்தேன் கொள்வாரில்லை என வருந்த நேரும்! கடைசியாக என் இனிய நண்பர்களே! ஆடை அணிகலன் முதல், பாடை கட்டுவது வரை, எல்லாவற்றிற்கும் ஏராளமாய் எடுத்து இறைக்கும் நாம், இந்தப் பத்து உருபாவைக்கூட இந்தப் பாவேந்தனுக்கு மாதம் ஒரு முறை தரத் தயங்கினால் நம்மைப்போல் தரம் தாழ்ந்த இனம் இத்தரையில் இல்லை என்பது உறுதிப்பட்டுவிடும். நன்றி!

என்றும் தங்கள் அன்பன்.

— இரா.பிரதாப் குமார். பெங்களூர்-16.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)